REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 ஜுலை 6 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 92 இல. 172 | Saturday 06, July, 2024 | 10 பக்கங்கள் | 50/-

## நாளைய வாரமஞ்சரியுடன் அரசாங்க வர்த்தமானி



இலங்கை நீதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்கள், இலங்கை தேசிய புலமைச் சொத்துகள் அலுவலகத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு 2024/2025 ஆம் ஆண்டுக்கான விபரங்கள் அடங்கிய வர்த்தமானி நாளைய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் வெளிவரவுள்ளது.

# வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பினால் நாட்டுக்கு 08 பில். டொலர் நிவாரணம்

## 'உருமய' வேலைத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் 73,143 பேருக்கு காணி உறுதிகள்

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இருதரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்து 05 பில்லியன் டொலர் கடன் வட்டி நிவாரணம் கிடைக்க இருப்பதோடு வர்த்தகக் கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 03 பில்லியன் டொலர் கடனை வெட்டிவிடப்பட இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதனூடாக நாட்டு மக்களுக்கு 08 பில்லியன் டொலர் நிவாரணம் கிடைப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

20 இலட்சம் முழுமையான காணி உறுதிகளை வழங்குவதற்கான 'உருமய' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல் மாவட்டத்தில் 73,143 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. அதன்படி நேற்று (05) குருநாகல் வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் 463 பேருக்கு காணி உறுதிகளை அடையாள ரீதியாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

### மக்களுக்கு காணி உரிமை வழங்குவதே உண்மையான சோசலிசம்

### நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவித்த அரசாங்கம், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க ஆரம்பித்துள்ளது

### புதிய பொருளாதாரத்துடன் நாடு முன்னேறும் போது குருநாகலுக்கு புதிய அபிவிருத்தி திட்டம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி சிலர் சோசலிசம் பற்றி கதைத்தாலும், மக்களுக்கு முழுமையான காணி உரிமையை வழங்குவதே உண்மையான சோசலிசமாகும் என்றும் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்ட அரசாங்கம் தற்போது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, "உருமய" காணி உறுதிகள் வழங்கும் திட்டத்தின் மூலம் மேலும் 20 இலட்சம் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவார்கள் எனவும் சுட்டிக்காட்டினார். இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாள ரீதியாக காணி உறுதிகளை வழங்கி வைத்தார்.

06



SLFP பொதுச் செயலாளராக தயாசிறி

## கட்சி தலைமையகத்தின் வெளியே கையெழுத்திட்டு பதவியேற்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை தாம் வகிப்பதாகக் கூறி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கட்சி தலைமையகத்துக்கு முன்பாக நேற்று (05) பதவியேற்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை கட்சி தலைமை அலுவலகத்துக்குள் செல்ல பொலிஸார் அனுமதிக்காததால், கட்சி தலைமை அலுவலகம்

06



தடைப்பட்டுள்ள பேச்சை ஆரம்பிக்க

## புதுடில்லி வருமாறு அமைச்சர் டக்ளஸுக்கு ஜெய்சங்கர் அழைப்பு

பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு புதுடில்லிக்கு வருமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

06



பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல்

## தொழில் கட்சி அமோக வெற்றி பிரதமர் ஆகிறார் கியர் ஸ்டாமர்

### ரிஷி சுனக்குக்கு தோல்வி

பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில் தொழில் கட்சி மொத்தமுள்ள 650 தொகுதிகளில் சுமார் 410 க்கும் மேற்பட்ட தொகுதிகளை பெற்று முன்னணியில் இருப்பதால், பிரதமர் ரிஷி சுனக்கின் கட்சி பின்னடைவை சந்தித்துள்ளது. இதனையடுத்து பிரதமர் ரிஷி சுனக் இராஜினாமா செய்துள்ளார்.

06





03

யாழ். பால் உற்பத்தி விற்பனை நிலையம்

## பழுதடைந்த தயிர் விற்பனை வர்த்தகருக்கு ரூ. 30,000 அபராதம்

## மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிப்பு

### வர்த்தமானி வெளியீடு

மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார விநியோகம் பெற்றோலிய பொருட்கள்

06



03

நல்லிணக்கத்தினூடாக

## இலங்கையின் அபிவிருத்தியை ஊக்குவிக்க அழைப்பு

## அமைச்சர் அலி சப்ரி–ஜப்பான் முன்னாள் பிரதமர் சந்திப்பு



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, ஜப்பான் முன்னாள் பிரதமர் Fukuda Yasuo தலைமையிலான குழுவினரை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பில் ஜப்பான் இலங்கை சங்கத்தின் தலைவர் சசாகி மிகியோ, மிட்சுபிஷி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்த சந்திப்பு குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான இருதரப்பு

06

### புதிய யுக்திய நடவடிக்கை

## 24 மணி நேரத்துக்குள் 1,426 நபர்கள் கைது



புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையில் கடந்த 24 மணி நேரத்துள் நாடளாவிய ரீதியில் 1,426 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் 01 கிலோ 86 கிராம் ஹெரோயின், 782 கிராம் 722 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 03 கிலோ 774 கிராம்

06

## படைப்பாளர், சட்டத்தரணி எஸ்.முத்துமீரான் காலமானார்

இலங்கையின் சிரேஷ்ட படைப்பாளரும், உருவகக் கதை எழுத்தாளரும் கிழக்கு மாகாணத்தின் பிரபல கிரிமினல் வழக்கறிஞருமான சின்னத்தம்பி முத்துமீரான் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இயற்கை எய்தினார். திடீரென

06



சுற்றுலாத்துறை, மீன் விலை உயர்வால்

## நாட்டில் முட்டை பாவனை 15 வீதத்தால் அதிகரிப்பு



நாட்டில் தற்போது முட்டை பாவனை 15 வீதத்தினால் அதிகரித்துள்ளது. முட்டை பாவனை ஏற்கனவே 07 மில்லியனாக இருந்தது. தற்போது இது 8.5 மில்லியன்

06

இலங்கையரின் பொறுப்பற்ற நடத்தை

## இஸ்ரேலில் வேலைவாய்ப்புகள் பெறுவதில் பெரும் நெருக்கடி

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

இஸ்ரேலுக்குச் சென்றுள்ள சில இலங்கையரின் பொறுப்பற்ற நடத்தை காரணமாக இஸ்ரேலிய வேலை வாய்ப்புக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. அதனால் இவர்களின் முறையற்ற நடத்தைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென

06



நாடு பற்றி எரிந்தபோது ஓடி ஒளிந்தோர்

## ஜனாதிபதி தேர்தல் என்றவுடன் நானும் ஜனாதிபதி என்கின்றனர்

### இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

நாடு பற்றி எரிந்தபோது ஓடி ஒளிந்தவர்கள் ஜனாதிபதி தேர்தல் என்றவுடன் நானும் ஜனாதிபதிதான் என்று கூவிக்கொண்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

06




## பிரிட்டன் பாராளுமன்றத்தில் இலங்கை வம்சாவளி பெண்

### உமா குமரன் MPயாக தெரிவு

பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில் ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போ பாராளுமன்ற தொகுதியில் இலங்கை வம்சாவளி தமிழரான உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார். இவர் தொழில் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். தொழில் கட்சி பிரிட்டனில் சுமார்

06



அக்குறணை நகரில் பாரிய தீ விபத்து

## மூன்று மாடி வர்த்தக கட்டடம் முற்றாக தீயில் எரிந்து நாசம்

### 50 Gas சிலிண்டர்களும் இருந்ததாக தெரிவிப்பு

அக்குறணை குறூப் நிருபர்

நேற்று 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட இத்திடீர் தீ விபத்து காரணமாக

06



பதுளை, வெலிஹித்தவில் கோர விபத்து

## வீதியின் நடுவே கனரக லொறி கவிழ்ந்ததால் 04 பேர் ஸ்தலத்தில் பலி

பதுளை குறூப், சொரனாதோட்டை குறூப் நிருபர்கள்

பதுளை, சொரனாதோட்டை, வெலிஹித்த பகுதியில் பயணித்த லொறியொன்று நேற்று (05) பிற்பகல் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் படுகாயமடைந்துள்ளனர்.





### படுகாயமடைந்த 03 பேர் கவலைக்கிடம்

காயமடைந்தவர்களுடன் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த மூவரின் நிலைமை

06

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வு பணி ஆரம்பம்

**ஓமந்தை விஷேட நிருபர்**




முல்லைத்தீவு கொக்குதொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வு பணியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியானது நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் (04) பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அகழ்வு பணியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஸ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தொல்லியல் திணைக்களத்தினர், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுளந்த மற்றும் பணிப்பாளர் ஜெ.தற்பரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், மனித உரிமைகள் சட்டத்தரணிகளான எஸ்.ரட்ணவேல், ரணித்தா ஞானராசா, வி.கே. நிறஞ்சன் மற்றும் பொலிசார், விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

அகழ்வு நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாக நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற அகழ்வு பணிகளுக்கு முன்னாயத்தமான நடவடிக்கைகளே நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, நிதி ஒதுக்கீடு காலம் தாழ்த்தப்பட்டதன் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய மனித எலும்புக்கூடு இருக்கும் பகுதி என அடையாளம் காணப்பட்ட இடங்கள் துப்புரவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன்மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இவ்வாறு இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இருகட்டங்களாக இடம்பெற்ற அகழ்வாய்வுகளின் படி இதுவரையில் குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகளும், தமீழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்தோடு இரண்டாங்கட்ட அகழ்வாய்வு பணிகளின்போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவிமூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. குறித்த ஸ்கேன் கருவி ஆய்வின்மூலம் முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதானவீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த மனிதப்புதைகுழி அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழ்வாய்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகளுக்கான நிதிஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் மூன்றாம் கட்டத்திற்கான நிதி கிடைக்கபெற்றுள்ள நிலையில் இன்றையதினம் ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றிருந்தது.

# வடக்கின் உதயம்

## விமானம் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடல்



**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனது பூதவுடல் யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றையதினம் விமானம் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனின் பூதவுடலுக்கு நேற்று பலரும் அஞ்சலி செலுத்திய நிலையில் அஞ்சலி நிறைவுக்கு வந்து பூதவுடல் அங்கேயே வைக்கப்பட்டது.

தந்தை செல்வா கலையரங்கில் இருந்து நேற்றுக் காலை கார் மூலம் பலாலி விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து திருகோணமலைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

திருகோணமலையில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியை நடைபெறவுள்ளது

## மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டு பிரிவின் பணிப்பாளர் நாயகமாக தி.ஜோண் குயின்ரஸ் நியமனம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



வடமாகாண கல்வி பணிப்பாளராக பணியாற்றிக்கொண்டிருக்கும் தி. ஜோண் குயின்ரஸ் மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்த்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டு அரச சேவையில் ஆசிரியராக இணைந்து அதிபராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, 4 வலயங்களின் வலயக் கல்வி பணிப்பாளராக, மேலதிக மாகாண கல்வி பணிப்பாளராக பணியாற்றி, தற்போது மாகாண கல்வி பணிப்பாளராக கடமையாற்றி வருகின்ற நிலையில் இவருக்கு இந்த அதிஉயர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவர் கடந்த 01.01.2024 முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதி விசேட தரத்திற்கு தேசிய பொதுச் சேவை ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் தமது கடமைகளை பொறுப்பேற்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபராக இருந்த மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் நேற்று முன்தினம் 04/07/2024 யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபராக தமது கடமைகளை மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் காலை 09 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக நியமனம்பெற்ற ம.பிரதீபனை, பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து வரவேற்றதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டனர். இதில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் காணி ஏஸ்.ஸ்ரீமோகன், மற்றும் மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். பிரதமர் தினேஷ் குணவர்த்தவினால் 03.07.2024 அன்று பிரதமர் அலுவலகத்தில் வைத்து யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனுக்கான நியமனம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் சவுக்கு வெட்டிய குற்றத்தில் மூவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் சவுக்கு மரங்கள் வெட்டிய குற்றச்சாட்டில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மணற்காட்டு பகுதியில் சவுக்கு மரங்கள் பெருந்தொகையாக வெட்டப்படுவதாக வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் மூவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெட்டப்பட்ட சவுக்கு மரங்களை மீட்டுள்ளதுடன் துவிச்சக்கர வண்டிகளையும் மீட்டுள்ளனர்.




## மலையக மக்களின் மறுமலர்ச்சிக்கு ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் செயற்படுத்த மலையக தமிழ்க் கட்சிகள் பூரண ஆதரவு வழங்கவேண்டும்

**சுப்பையா ஆனந்தகுமார்**



நாடு நெருக்கடிக்குள் சிக்கியவேளை ஆட்சியை பொறுப்பேற்காது புறமுதுகுகாட்டி ஓடிய எதிர்க்கட்சி தலைவர் ஜனாதிபதியின் பொருளாதார மீட்பு வேலைத்திட்டங்களை எதிர்ப்பது துரோக அரசியலின் வெளிப்படாகும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார். தெரிவித்தார்.

அத்துடன், மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயற்படும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு மலையக தமிழ்க் கட்சிகள் ஓரணியில் திரண்டு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் சுப்பையா ஆனந்தகுமார் மேலும் கூறியவை வருமாறு,

"உலகில் வங்குரோத்து நிலையை அடைந்த நாடுகள் குறுகிய காலப் பகுதிக்குள் பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீண்டதில்லை. கிறீஸ் போன்ற நாடுகளில் இன்றளவிலும் நெருக்கடி உள்ளது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தூர நோக்கு சிந்தனையாலும், சிறந்த தலைமைத்துவ பண்பாலும் இலங்கை குறுகிய காலத்துக்குள் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளது. இது பெரும் சாதனையாகும் என்பது மக்களுக்கு தெரியும்.

இன்று எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் இதர பொருட்களின் விலைகள் குறைய ஆரம்பித்துள்ளன.

அடுத்துவரும் நாட்களில் மின்கட்டணமும் குறைக்கப்படவுள்ளது. இவற்றை சகித்துக்கொள்ள முடியாததாலேயே, குறுகிய அரசியல் நோக்கில் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சி தலைவரும், அவரின் சகாக்களும், ஏனைய சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் போர்க்கொடி தூக்குகின்றனர்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு தற்போதைய நாடாளுமன்றத்தின் முழுமையாக ஆதரவு கிட்டினால் நாடு வேகமாக வளரக்கூடிய சாத்தியம் உள்ளது. அதற்கான சந்தர்ப்பத்தை தடுத்து, குறுக்கு வழியிலேனும் ஆட்சிக்கு வருவதே எதிர்க்கட்சி தலைவரின் கனவாக உள்ளது. அதனால்தான் அவரின் செயற்பாடு துரோக அரசியலாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்திவருகின்றார். வடக்கு, கிழக்கில் காணி பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவருகின்றன. உறுமய பத்திரம் வழங்கப்பட்டுவருகின்றது. சமூக நலன்புரி பாதுகாப்பை உறுதிப்படுத்த அஸ்வெசும வழங்கப்பட்டு வருகின்றது.

அதேபோல மலையக மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளையும் உறுதிப்படுத்திவருகின்றார். எனவே, எதிரணியில் உள்ள மலையக கட்சிகளும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை ஆதரிப்பது நல்லது. ஏனெனில் சஜித் வாயால் வடை சுடும் அரசியல்வாதி. ரணில் சொல்லைவிட செயலுக்கு முக்கியத்துவம், முன்னுரிமை வழங்குபவர்." – என்றார்.

## மிளகுசேணை தோட்டத்தில் தீ பற்றியதில் 07 வீடுகள் சேதம்; 11 குடும்பங்கள் நிர்க்கதி



லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிளகுசேணை தோட்டத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 07 வீடுகளில் வசித்து வந்த 11 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அத் தோட்ட வாசிகசாலையில் சிரமத்துக்கு மத்தியில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மிளகுசேணை தோட்டத்தில் இரண்டு பகுதிகளில் 24 வீடுகளை கொண்ட இலக்கம் (01) தொடர் வீட்டு குடியிறுப்பில் வியாழக்கிழமை (04) இரவு 7.50 மணியலவில் திடீரென தீ பிடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தீ பிடிப்பு சம்பவத்தில் (07) வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகளை கொண்ட இந்த தொடர் குடியிறுப்பு (லயத்தில்) ஒரு பகுதியில் மூன்று வீடுகளும், மறுப்பகுதியில் நான்கு வீடுகளும் தீ பிடிப்புக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தி'ல் ஏனைய வீடுகளுக்கு தீயை பரவவிடாமல் தோட்ட இளைஞர்கள்,பொது மக்கள் பாடுப்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளனர்.

அதேநேரத்தில் இந்த சம்பவம் குறித்து லிந்துலை பொலிஸாருக்கு அறிவித்த போதிலும் தீயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரும் வரை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவில்லை எனவும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த தீ பிடிப்பு சம்பவத்தில் தமது உடமைகள்,மற்றும் சொத்துக்கள், முக்கிய ஆவணங்கள் என இழந்து நிர்க்கதிக்கு உள்ளான பாதிக்கப்பட்டவர்களை உறவினர்கள் வீடுகளிலும், தோட்ட வாசிகசாலையிலும் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தோட்ட தொழிற்சங்க தலைவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் தற்போது தீ பிடிப்புக்கு உள்ளான தொடர் குடியிருப்பு லயம் இதற்கு முன்பும் இரண்டு தடவைகள் மின் ஒழுக்கு காரணமாக தீப்பிடிப்பதிலிருந்து தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த லயத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரம் தொடர்பில் மின் கசிவு ஏதும் உள்ளதா என பரிசோதிக்க தோட்ட நிர்வாகம், கிராமசேவகர், லிந்துலை உப மின்சார சபை காரியாலய அதிகாரிகளுக்கும் பல முறை அறிவிக்கப்பட்டுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இந்த தீப்பிடிப்பு சம்பவம் குறித்த விசாரணையை லிந்துலை பொலிஸார் நுவரெலியா இரசாயன தடையவியல் பொலிஸாரின் உதவியுடன் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவு மற்றும் இதர உதவிகளை தோட்ட நிர்வாகம், கிராமசேவகர் ஊடாக வழங்கி வரும் நிலையில் மறுபுறத்தில் இழப்பீடுகள் தொடர்பில் பதிவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆ.ரமேஸ்.**



குறுகிய அரசியல் இலாபங்களை கருத்தில் கொண்டு தியத்தலாவ தள வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளை பண்டாரவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் பேரணியொன்று தியத்தலாவை நகரில் நேற்று 4 மாலை இடம் பெற்றது. தியத்தலாவ தள வைத்தியசாலையை பாதுகாக்கும் அமைப்பினர் எற்பாடு செய்த இம் மாபெரும் பேரணியில் அரசியல் பேதங்களை மறந்து நகரம் மற்றும் தோட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். **(படம் ஊவா சுழற்சி நிருபர்)**

## பெண் பொலிஸ் குளிப்பதை படமெடுத்த ஆண் பொலிஸாருக்கு விளக்கமறியல்

பெண் பொலிஸார் தங்குமிட விடுதியிலுள்ள குளியறையில் குளித்து கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவரை மறைந்திருந்து படம் பிடித்த ஆண் பொலிஸ் கொஸ்தாபலை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை நுவரெலியா மாவட்ட நீதவான் பிரபுதிகா நாணயக்கார (04.07.2024) மாலை பிறப்பித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. லிந்துலை பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் தங்குமிட விடுதி குளியலறையில் குளித்து கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவரை இதே பொலிஸ் நிலையத்தில் கொஸ்தாபல் பதவி வகிக்கும் ஆண் பொலிஸ் கொஸ்தாபல் தனது ஸ்மார்ட் போனால் படம் பிடித்து வைத்திருந்துள்ளார்.

இந்த விடயம் ஏனைய பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து விசாரணைகள் தொடரப்பட்டு குறித்த பொலிஸ் கொஸ்தாபல் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்த லிந்துலை பொலிஸார் அவரை (04.07.2024) நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

இதன்போது இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிபதி பிரபுதிகா நாணயக்கார சந்தேக நபரான பொலிஸ் கொஸ்தாபலை இம்மாதம் (09.07.2024) செவ்வாய் கிழமை வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்தார்.

**ஆ.ரமேஸ்.**

# கடன் மறுசீரமைப்பின் வெற்றி வலுசக்தி துறையை பலப்படுத்தும்

## இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியினால் கடந்த நெருக்கடியின் போது முடங்கிக் கிடந்த வலுசக்தித் துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, மின்சார நெருக்கடியைத் தீர்க்க இது பெரும் உதவியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சியில் உள்ள சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த,



கடந்தகால நெருக்கடி நிலையின் போது வலுசக்தித் துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின. ஆனால் தற்போது இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. எனவே, வெளிநாடுகளில் இருந்து கடன் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட குறித்த திட்டங்களை, மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான சட்ட ரீதியிலான நிலைமைகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றி, நாட்டில் நிலவும் வலுசக்தி நெருக்கடியைத் தீர்க்க பெரும் உதவியாக இருக்கும் என்பதைக் கூற வேண்டும்.

மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சக்தி அமைச்சு ஆகியவை கூரையின் மீது பொருத்தப்படும் சூரிய சக்தி கட்டமைப்பு மூலம் மின்சார உற்பத்திக்கான செலவு குறித்து பொருத்தமான கணக்கீடுகளை செய்துள்ளன. அதன்படி, கட்டணங்களை குறைக்க முடிந்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு விண்ணப்பிக்க முடிந்தது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மின்சார சபை நட்டமின்றி செயற்படும் நிலையை ஏற்படுத்த முடிந்துள்ளது.

மேலும், அதானி திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் சுற்றாடல் அறிக்கைகள் போன்று அது தொடர்பான மேலதிக பணிகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன. அவ்விடயங்கள் நிறைவடைந்த பின்னர், தற்போதுள்ள விலைகளின் பிரகாரம் செயற்பட முடியுமா என்பது குறித்து கலந்துரையாட உள்ளது.


நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சிகளின் சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவது தெரிகின்றது.

உமா ஓயா, சாம்பூர் போன்ற மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் போதும் இவ்வாறான பொய்யான கருத்துகளை அவர்கள் குறிப்பிட்டனர்.

தினகரன் THINAKARAN

# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 06 ஜூலை 1932



கவர்னரின் திக் விஜயம்
பேருவளை முஸ்லிம் சங்கத்தின் வரவேற்பு
கைத்தொழில் முற்போக்கு
உயர்தரக் கல்விச்சாலைகளை அதிகரிப்பதனால் தொழிற் பஞ்சமும் அதிகரிக்கின்றது
உயர்தரக் கல்லூரிகளை அதிகரிப்பதனால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்க வேண்டியிருக்கிறது.
தற்போது அரசாங்க வருமானமுங் குன்றிவிட்டது. புதிய புதிய ஸ்தாபனங்களை உண்டாக்குவதற்கு அரசாங்கத்தில் பணம் இல்லை. ஆதலால் உயர்தரப் பாடசாலைகளை நிறுவுவது தற்போது சாத்தியமானதல்ல.

## கவர்னரின் திக் விஜயம்

### பேருவளை முஸ்லிம் சங்கத்தின் வரவேற்பு

### கைத்தொழில் முற்போக்கு

உயர்தரக் கல்விச்சாலைகளை அதிகரிப்பதனால் தொழிற் பஞ்சமும் அதிகரிக்கின்றது

உயர்தரக் கல்லூரிகளை அதிகரிப்பதனால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்க வேண்டியிருக்கிறது.

தற்போது அரசாங்க வருமானமுங் குன்றிவிட்டது. புதிய புதிய ஸ்தாபனங்களை உண்டாக்குவதற்கு அரசாங்கத்தில் பணம் இல்லை. ஆதலால் உயர்தரப் பாடசாலைகளை நிறுவுவது தற்போது சாத்தியமானதல்ல.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## TIN இலக்கம் பெற்றுள்ளவர்கள்

# மாத வருமானம் குறைவெனில் வரி செலுத்த வேண்டியதில்லை

## கடிதம் மூலம் அறிவித்தாலே போதும்



வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் *Taxpayer Identification Number (TIN)* பெற்றுள்ளவர்கள் வரி செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்த கடிதங்கள் அல்லது குறுஞ் செய்திகள் வந்தாலும், அவர்களின் மாத வருமானம் 1,00,000 ரூபாயை தாண்டவில்லையெனில் அது தொடர்பாக ஒரு கடிதம் மூலமாக அறிவிப்பதன் மூலம் வரி செலுத்துவதைத் தவிர்க்க முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய இறைவரி திணைக்களத்தின் அருகிலுள்ள கிளை அலுவலகத்துக்குத் தெரிவிக்கலாமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 23 இலட்சம் பேர் *Taxpayer Identification Number* பெற்றுள்ளதாகவும், ஜூன் மாதத்தில் மட்டும் 13 இலட்சம் பேர் அந்த எண்ணைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். ஜூலை மாத இறுதிக்குள் *Taxpayer Identification Number* வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை 73 இலட்சமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நல்லிணக்கத்தினூடாக இலங்கையின் அபிவிருத்தியை ஊக்குவிக்க அழைப்பு



நல்லிணக்கத்தின் ஊடாக இலங்கையின் அபிவிருத்தியை ஊக்குவிக்குமாறு புலம்பெயர் இலங்கையர்களுக்கு ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம அழைப்பு விடுத்துள்ளார். *Dorchester* ஹோட்டலில் ரீஜண்ட் குழுவினால் கடந்த 3ஆம் திகதி நடத்தப்பட்ட வருடாந்த *"The Global Unity Dinner (GUD)"* நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், நல்லிணக்கத்தின் ஊடாக நாட்டில் அபிவிருத்தியை வளர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தினார்.

06

# சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் செயலமர்வு



சதுப்புநில பிரதேசத்தை அண்டிய பகுதியில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் தொடர்பில் சமூக, வணிக, மேம்பாட்டுத் திட்ட ஆய்வாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பங்கேற்புடனான செயலமர்வு தாஜ் சமுத்ரா வளாகத்தில் நடைபெற்றது. காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது. இதனை *Eyelid International Academy, Young Businessmen's Forum COYLE* மற்றும் *CIFORICRAF* ஆலோசனை நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

# ஸ்ரீல.சு.கட்சி தலைமையகம் எவருடைய சொத்தும் அல்ல

## சீர்குலைக்க முயன்றால் நீதிமன்றம் செல்வேன்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படும் உரிமையில் தலையிட வேண்டாமென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தவொரு குழுவும் சீர்குலைக்க முயற்சித்தால், தாம் அதை எதிர்த்து நீதிமன்றம் செல்லப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாசவேலைகளில் ஈடுபடாமல் சுதந்திரமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்துக்காக உழைக்க அனுமதிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சியின் தலைமையகம் எவருடைய சொத்தும் அல்ல என்றும், அங்கு வரும் மக்களுக்கும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுமாறு பொலிஸ் மாஅதிபர், பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மற்றும் மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜயசேகர தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல் குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி என்ற ரீதியில் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிவிப்பதற்கு இன்னும் கால அவகாசம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் கட்சி என்ற வகையில் கலந்துரையாடி தேர்தலுக்கு வேட்பாளரை முன்வைப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கவிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

இது குறித்து கலந்துரையாடுவோம். இன்னும் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

வேட்பாளரை நிறுத்துவதா இல்லையா என்பது குறித்து ஆலோசிப்போமென தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, இது குறித்த தீர்மானத்தை தற்போது மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார்.

# மறைந்த முத்துமீரான் ஒரு பன்முக ஆளுமையாளர்

## அனுதாப செய்தியில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்

இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பரப்பில் பன்முக ஆளுமையாக விளங்கிய மறைந்த சட்டத்தரணி எஸ்.முத்துமீரான், கல்வி மற்றும் சட்டம் சார்ந்த துறைகளிலும் கூட பாரிய பங்களிப்பை செய்த திருப்தியில் இவ்வுலகை விட்டுப் பிரிந்திருக்கிறார் என்றும் அவரது படைப்புக்கள் அனைத்திலும் இளம் சந்ததியினருக்கும் அரிய படிப்பினைகள் பொதிந்துள்ளன என்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.


அன்னாரின் மறைவையிட்டு அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"கிழக்கிலங்கையில், குறிப்பாக நாட்டின் தென்கிழக்கில், அம்பாறை மாவட்டத்தில், நில வளமும் நீர் வளமும் மிக்க நிந்தவூரில் பிறந்து மண்வாசனை கமழும் வண்ணம் தமது ஆக்கங்களை படைத்தளித்தவராக நண்பர் முத்துமீரான் வரலாற்றில் இடம்பெறுகிறார்.

இலங்கையில் மட்டுமல்லாது, கடல் கடந்து, தமிழகத்திலும் கேரளத்திலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற நாடுகள் பலவற்றிலும் அவர் தமது எழுத்துக்களின் வலிமையினாலும், வீரியத்தினாலும் மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தை பிடித்திருக்கின்றார்.

எங்களது இளமைக் காலத்தில் பொலன்னறுவை தம்பாளையில் எங்கள் தந்தையார் கடமையாற்றிய காலத்தில் இருந்தே அங்கு ஆசிரியராக அவர் எங்களுக்கு அறிமுகமாகியிருந்தார். அன்று தொட்டு இன்று வரை அவரது ஆக்கங்கள் என்றால், அவை சிறுகதையாக, உருவகக் கதையாக, கவிதையாக, கட்டுரையாக, நாடகமாக, நாட்டார் பாடலாக எவையாயினும் அவற்றால் ஈர்க்கப்பட்டிருக்கின்றோம்.

கிழக்கிலங்கைக்கு அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்திற்கு உரித்தான நாட்டார் பாடல் இலக்கியத்தை ஆய்வு செய்து, அவை அருகி வரும் காலத்தில் அவற்றை தனித்துவமான ஒரு கலை வடிவமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபல்யப்படுத்துவதில் முத்துமீரான் போன்ற மிகச் சிலரே முன் நின்றனர்.



தன் உயிரோடு ஊறிப் போயிருந்த இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு அப்பால் ஆசிரியர் பணியை சிறப்பாக ஆற்றிவிட்டு, சட்டத்துறையிலும் பிரவேசித்து சிரேஷ்ட சட்டத்தரணியாக பிரகாசித்த ஒருவராகவும் நாங்கள் நண்பர் முத்துமீரானைக் காண்கிறோம் .

எங்களது மறைந்த ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களால் அரவணைக்கப்பட்டவர்களில் ஒருவராக நண்பர் முத்துமீரானும் இருந்திருக்கிறார். 1997 ஆம் ஆண்டு அட்டாளைச்சேனையில் நடந்த தேசிய மீலாத் விழாவின் வெற்றிக்கு அவர் வழங்கிய பங்களிப்பு மறைந்த தலைவரின் மனதை கவர்ந்திருந்தது. அவரது அமைச்சு இணைப்பாளராகவும் இருந்திருக்கின்றார். அம்பாறை மாவட்டத்தில் தலைவரின் அழைப்பை ஏற்று பாராளுமன்றத் தேர்தலிலும் அவர் ஒரு வேட்பாளராக களம் இறங்கியிருந்தார்.

இலக்கியத்திலும், கல்விப் பின்புலத்திலும், சட்டத்துறையிலும் செல்வாக்குச் செலுத்தி தான் பிறந்த நிந்தவூருக்கு புகழீட்டிக் கொடுத்த மண்ணின் மைந்தர் நண்பர் முத்துமீரானுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் சுவன பாக்கியத்தை வழங்குவானாக.

அவரது பிரிவுத் துயரினால் வருந்துகின்ற குடும்பத்தினருக்கு எனதும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து மட்ட உறுப்பினர்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## யாழ். பால் உற்பத்தி விற்பனை நிலையம்

# பழுதடைந்த தயிர் விற்பனை வர்த்தகருக்கு ரூ. 30,000 அபராதம்

பழுதடைந்த தயிரை விற்பனைக்காக வைத்திருந்தமை மற்றும் உரிய சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை போன்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவருக்கு 30,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய பகுதியொன்றில் பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்றை நடத்திவந்த ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகரினால் இப்பால் உற்பத்தி விற்பனை நிலையம் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, பழுதடைந்த ஒரு தொகை தயிர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

விற்பனை நிலையத்தில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டது.



இவை தொடர்பில் பொது சுகாதார பரிசோதகரினால் யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது விற்பனையாளர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவரை கடுமையாக எச்சரித்து 30,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் விற்பனை நிலையத்தில் காணப்படும் சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் விற்பனை நிலையத்தை சீல் வைத்து மூடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 22ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 29


## குறள் தரும் சிந்தனை



அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்பது நீண்ட நாள் வாழ்வதற்கு வழியாகும்.

## மக்களை தவறாக வழிநடத்த முற்படும் விஷமச் சக்திகள்!

விஷமச் செயல்களில் ஈடுபடுகின்ற நபர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர். பொருளாதார வீழ்ச்சிக்குள் தள்ளப்பட்டிருந்த எமது நாடு படிப்படியாக மீட்சி பெற்று வருகையில், விஷமச் செயல்களில் ஈடுபடுகின்ற நபர்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

அரசுக்கு எதிரான சக்திகளின் பின்னணியிலேயே விஷமிகள் இவ்வாறான தகவல்களைப் பரப்பி வருகின்றனரென்பது புரியாத விடயமல்ல. எதிரணிகளின் தூண்டுதலின் பேரில் அல்லது செல்வாக்கின் பேரில் இத்தகைய விஷமத்தனமான செய்திகள் சமூக ஊடகங்களில் உலா வருகின்றன.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான கடனுதவி மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியன தொடர்பில் போலியான செய்திகள் சமீப நாட்களாக சமூக ஊடகங்களில் அதிகளவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அச்செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதில் எச்சந்தேகமும் கிடையாது. அவை புனையப்பட்ட செய்திகளாகவே உள்ளன.

அரசுக்கு பாதிப்பை உண்டாக்க வேண்டுமென்ற ஒரேயொரு விஷமத்தனமான நோக்கத்துக்காகவே இவ்வாறான செய்திகள் பதிவிடப்பட்டுள்ளன.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான கடன் ஒப்பந்தங்கள் குறித்து எதுவித தகவல்களோ அல்லது அதுபற்றி அறிவோ இல்லாதவர்களாலேயே இவ்வாறான செய்திகள் பரப்பப்படுகின்றன என்பதை இவ்விடயம் பற்றிய விபரம் புரிந்தோர் இலகுவாகவே அறிந்து கொள்வர். சர்வதேச நாணய நிதியம் என்பது சர்வதேசரீதியில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பெருநிறுவனம் என்ற புரிதல் சிறிதும் இல்லாதவர்களால் வெளியிடப்படுகின்ற இவ்வாறான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை மாத்திரமன்றி, நகைச்சுவைக்குரியன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடன் மறுசீரமைப்பு என்பது மிகக் கடினமான பணி. இந்தப் பணி கடினமானது மற்றும் வேதனையானது என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். கடன் வழங்குநர்களுக்கும், கடனாளிகளுக்கும், நாட்டு மக்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும், இந்தப் பணி கடினமானது. உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்கள், அடிப்படை கடன் தொகையைக் குறைக்க மாட்டார்கள். இலங்கையானது சலுகைகளை மட்டுமே பெற முடியும். கடன் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொள்வது, கடன் சலுகைக் காலம், வட்டி வீதத்தைக் குறைப்பது ஆகிய விடயங்களில் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனினும், இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், சிலர் அடிப்படைக் கடன் தொகையைக் குறைப்பது குறித்து இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இன்னும் சிலர் தாம் அதிகாரத்திற்கு வந்தபின்னர் அடிப்படைக் கடன் தொகையில் 50 வீதத்தைக் குறைத்துக் கொள்வதற்கு கடன் வழங்கியுள்ள நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறுகின்றனர். இவ்வாறான பணியைச் செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கம் காண்பது அவசியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, நாம் சொல்வதை மட்டும் கடன் வழங்குநர்கள் செய்யமாட்டார்கள் என்பதை இவ்வாறு குற்றம் சுமத்துபவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச பொருளாதார வழிமுறைகள் குறித்து இவர்களுக்கு எந்தப் புரிதலும் இல்லை என்பதே இவ்வாறான கருத்துக்களின் மூலம் தெரிகிறது.

சமூக ஊடகங்களிலேயே இவ்வாறான அவதூறான செய்திகள் பரப்பப்படுகின்றன. ஒரு தனிநபரையோ அல்லது அரசாங்கத்தையோ வெறுப்பூட்டும் வகையில் செய்திகளை பரப்புதல் மக்கள் மத்தியில் உண்மைக்குப் புறம்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடும்.

பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கையில் நடைபெற்ற கடந்த காலத்தில் இடம்பெற்ற பல பிரச்சினைகளுக்கு இவ்வாறான உண்மைக்குப் புறம்பான வெறுப்பு பேச்சுக்களே காரணமாக அமைந்தமை நினைவிருக்கலாம்.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கான பிரதான காரணம் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் உண்மைக்குப் புறம்பான தகவல்களாகும். சமூக ஊடகங்கள் எனப்படுபவை ஒரு பரந்துபட்ட வலையமைப்பாகும். இவற்றில் பதிவிடப்படும் செய்திகளை உலக மக்கள் அனைவருக்கும் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆகவே ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கும் போது கவனமாக நடந்து கொள்ளுதல் அவசியம். மக்களை தவறாக வழிநடத்துவதற்கு முற்படலாகாது.

உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர். ஆனால் இறுதியில் மக்களை தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவுமே இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை வருந்தத்தக்கது.

இலங்கையில் அரசுக்கு எதிரான சக்திகள் மக்களை தவறாக வழிநடத்த சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

editor.tkn@lakehouse.lk

## காசநோய் ஆராய்ச்சியில் திருப்புமுனை:

# நுரையீரல் கட்டமைப்பை பிரதிபலிக்கும் 3 டி அமைப்பை உருவாக்கிய ஆய்வாளர்கள்



காசநோய் (TB) ஆராய்ச்சிக்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில், இந்திய அறிவியல் நிறுவனத்தின் (IISC) விஞ்ஞானிகள் மனித நுரையீரல் கட்டமைப்பினை துல்லியமாக பிரதிபலிக்கும் ஒரு புதுமையான 3 டி ஹைட்ரோஜெல் சோதனை முறையை உருவாக்கியுள்ளனர். இந்த முன்னேற்றம் காசநோய் பக்டீரியா நுரையீரல் கலங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கவனிக்கவும், காசநோய் சிகிச்சையின் செயல்திறனை மதிப்பிடவும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகிறது.

மைக்கோபாக்டீரியம் காசநோய் (Mtb) ஒரு வலிமையான நோய்க்கிருமியாக உள்ளது, இது 10.6 மில்லியன் நபர்களை பாதிக்கிறது மற்றும் 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 1.3 மில்லியன் இறப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்று WHO தெரிவித்துள்ளது. உயிர்பொறியியல் துறையின் இணை பேராசிரியர் ரச்சித் அகர்வால் தலைமையில், IISc குழு பாரம்பரிய 2D கலாசார மாதிரிகளின் வரம்புகளை நிவர்த்தி செய்தது.



இந்த பழைய மாதிரிகள் நுரையீரல் திசுக்களின் சிக்கலான 3D கட்டமைப்பை மீளுருவகம் செய்யத் தவறிவிட்டன, இது ஆராய்ச்சி முடிவுகளை பக்கச் சார்பாக மாற்றுகிறது. அட்வான்ஸ்ட் ஹெல்த்கெயார் மெட்டீரியல்ஸில் வெளியிடப்பட்ட ஆய்வின் இணை ஆசிரியரான அகர்வால், காசநோயின் பரிணாம தழுவல் தன்மையைக் குறிப்பிட்டார், இது ஒரு நீண்ட கால சவால் என்று விபரித்தார்.

புதிதாக உருவாக்கப்பட்ட ஹைட்ரஜல் கொலாஜனைப் பயன்படுத்துகிறது, இது ஒரு முக்கிய நுரையீரல் திசு கூறு. இந்த 3 டி அமைப்பு மனித நோயெதிர்ப்பு உயிரணுக்களுடன் காசநோய் பக்டீரியா தொடர்புகளை நீண்டகாலமாக கண்காணிக்க அனுமதிக்கிறது. இது வழக்கமான அமைப்புகளின் 47 நாட்களுடன் ஒப்பிடும்போது மூன்று வாரங்கள் வரை நீடிக்கும். குறிப்பிடத்தக்க வகையில், ஆர்.என்.ஏ வரிசைமுறை, ஹைட்ரோஜெல்லில் வளர்க்கப்பட்ட செல்கள் உண்மையான மனித நுரையீரல் திசு மாதிரிகளை டிரேடிட்டில் உள்ளதை விட நெருக்கமாக ஒத்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியது.

மருந்து சோதனையில் அமைப்பின் செயல்திறனையும் குழு நிரூபித்தது. பொதுவான காசநோய் மருந்தான பைராசினமைட், கணிசமாக குறைந்த அளவுகளில் செயல்திறனை வெளிப்படுத்தியது, 2டி CULTURE உடன் ஒப்பிடும்போது மருத்துவ தேவைகளுடன் மிகவும் நெருக்கமாக ஒத்துப்போகிறது என்பதை அவர்கள் கண்டறிந்தனர்.

2டி ஆய்வு விறைப்புக்கும் நுரையீரல் திசுக்களின் மென்மைக்கும் இடையிலான அப்பட்டமான வேறுபாட்டை அகர்வால் எடுத்துக்காட்டினார், இது தொற்று நிலைமைகளின் ஹைட்ரோஜெல்லின் உயர்ந்த பிரதிபலிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தொழில்துறை மருந்து சோதனைக்கான தங்கள் கண்டுபிடிப்பை பரவலாக ஏற்றுக்கொள்வதற்கும் அளவிடுவதற்கும் வசதியாக ஆராய்ச்சியாளர்கள் இந்திய காப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

எதிர்கால முயற்சிகள் நோயாளிகளிடையே காசநோயின் பல்வேறு வெளிப்பாடுகளை ஆராய்வதற்கும் ஆராய்வதற்கும் மாதிரியைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது.

இந்த முன்னேற்றம் கசநோய் ஆராய்ச்சியை விரைவுபடுத்துவதாக உறுதியளிக்கிறது. இது இந்த நீடித்த உலகளாவிய சுகாதார சவாலுக்கு மிகவும் பயனுள்ள சிகிச்சைகளுக்கு வழிவகுக்கும்.

# பீகாரில் பதினைந்து தினங்களில் இடிந்து விழுந்த 10 பாலங்கள்!





இந்தியாவின் பீகாரில் அடுத்தடுத்து பாலங்கள் இடிந்து விழுந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 15 நாட்களில் 10 பாலங்கள் இவ்வாறு இடிந்து விழுந்துள்ளன. நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. ஓரிரு நாட்களுக்கு முன்னர் பெய்த கனமழையால் டெல்லி விமான நிலையத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது. அதேபோல குஜராத் மாநிலம் ராஜ்கோட்டிலும் கனமழை காரணமாக விமான நிலைய மேற்கூரை இடிந்து விழுந்திருந்தது.

இந்நிலையில் பீகாரில் பெய்து வரும் கனமழை காரணமாக ஆற்று பாலங்கள் தொடர்ச்சியாக இடிந்து விழுந்துள்ளன. புதனன்று காலை பீகாரின் சிவான் மாவட்டம் கந்தகி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. தியோரியா தொகுதியில் அமைந்துள்ள இந்த சிறிய பாலம், பல கிராமங்களை மஹ்ராஜ்கஞ்ச் பகுதியுடன் இணைக்கிறது. இது பீகாரில் கடந்த 15 நாட்களில் நிகழ்ந்த 7 ஆவது சம்பவமாகும்.

இதனைத் தொடர்ந்து 8 ஆவது சம்பவமாக சாப்ர மாவட்டத்தில் உள்ள மற்றொரு சிறுபாலம் இடிந்து விழுந்திருக்கிறது. பாபா தோத்நாத் கோயில் அருகே உள்ள ஆற்றின் மேல் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இது ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாலம் இடிந்து விழுந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 24 மணி நேரத்தில் சரண் மாவட்டத்தில் ஜந்தா பஜாரிலும், லஹ்லாத்பூரிலும் தலா ஒரு பாலம் என 2 பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன.

15 நாட்களில் 10 பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன. இதனால் நிதிஷ் குமார் தலைமையிலான பா.ஜ.க கூட்டணி அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பாலங்கள் இடிந்து விழுந்த இடங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளனர்.

“தற்போது இடிந்த விழுந்துள்ள சிறுபாலம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டிருக்கிறது. சம்பவம் நடந்த பகுதியில் நாங்கள் ஆய்வை மேற்கொண்டோம். நீர் வளத்துறையை சேர்ந்த அதிகாரிகள் பாலம் இடிந்து விழுந்தது குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். விரைவில் விபத்துக்கான காரணம் தெரிய வரும்” என்று அதிகாரிகள் கூறியுள்ளார்.

சரண் தவிர சிவான், மதுபானி, அராரியா, கிழக்கு சம்பாரண் மற்றும் கிஷன்கஞ்ச் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பாலம் இடிந்து விழுந்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் நீர் வளத்துறை அதிகாரிகள் ஆய்வை மேற்கொண்டிருக்கின்றனர். ஆற்றில் மணல் அதிகப்படியாக அள்ளப்பட்டதால் நீரின் வேகம் அதிகரித்து பாலம் இடிந்து விழுந்திருக்கிறது என்று உள்ளூர் மக்கள் கூறியுள்ளனர்.

இந்த விவகாரம் மாநில அரசுக்கு தலைவலியை கிளப்பியுள்ள நிலையில், சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள பாலங்கள் அனைத்தும் உடனடியாக அடையாளம் காணப்பட்டு சரி செய்யப்பட வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கு முதல்வர் நிதிஷ் குமார் உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து அதிகாரிகள் முழு வீச்சில் களமிறக்கப்பட்டிருக்கின்றனர்.

# உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கடற்கரை பிரதேசங்களில் தூய்மை பேணப்படுவது அவசியம்



இயற்கையின் அருட்கொடையான கடற்கரைப் பிரதேசங்கள் மனங்களை கொள்ளை கொள்ளும் அழகுமிக்கவை. கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் எப்போதும் மனநிறைவுடன் பொழுது போக்குவர். இவ்வாறு எழில், இரம்மியம் அதிகம் நிறைந்த பகுதிகள் எப்பொழுதும் சுத்தம், சுகாதாரமாகப் பராமரிக்கப் பாதுகாக்கப்பட வேண்டும்.

தற்காலத்தில் அதிகமானவர்கள் உல்லாசம், ஓய்வு, பொழுது போக்கு, விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற காரணங்களுக்காக இயற்கைப் பிரதேசங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். பெருமளவு மக்களைக் கவரும் கடற்கரைப் பிரதேசங்கள், ஆற்றங்கரை மற்றும் பாரியளவிலான நீரேந்துப் பிரதேசங்கள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன எனலாம்.

இவைதவிர, அதிக வெயில், உஷ்ணம் நிறைந்த வரட்சிக் காலங்களில் கடற்கரைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைப் பிரதேசங்களை நாடும் மக்கள் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. குறித்த பிரதேசங்களில் இரவு, பகல் பாராது சனக்கூட்டம் நிரம்பிக் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் இயற்கைப் பிரதேசங்கள் சுத்தம், சுகாதாரமாக பராமரிக்கப்படாத ஒரு அவல நிலையை அண்மைக் காலத்தில் அதிகம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலுள்ள கடற்கரைகள் முக்கியமானவை.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் பொதுமக்கள் ஓய்வு மற்றும் பொழுது போக்கிற்காக பயன்படுத்தும் பொது இடங்கள் அதிகமுள்ளன. இவ்வாறான பொதுஇடங்களை குப்பை கூழங்களை யிட்டு அசிங்கப்படுத்துவோர் தற்காலத்தில் சமூகத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றனர். இது மிகவும் கவலைக்குரியது.

பொது இடங்கள், இரம்மியப் பிரதேசங்களை பாதுகாப்பதை விடுத்து அசிங்கப்படுத்துவதையே அதிகம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு அசுத்தப்படும் பிரதேசங்கள் உடனடியாக அல்லது ஒழுங்குமுறையாக சுத்தம் செய்யப்படாது, நீண்ட காலம் கவனிப்பாரற்ற நிலையில் காட்சியளிக்கும் ஒரு அவல நிலையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடற்கரைப் பிரதேசங்களை பொழுது போக்கிற்கன்றி, போதைப் பொருள் பாவனைக்குப் பயன்படுத்தி வருபவர்கள் தொகையும் அதிகரித்துள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலத்தில் கடற்கரைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவு பணிகளின் போது கிடைக்கப்பெற்ற கழிவுகள் இதனை தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளன.

இவ்வாறு போதைவஸ்துப் பாவனையின் எச்சங்கள் கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படுவது சமயப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், இயற்கையை நேசிப்பவர்கள், பொதுமக்கள் மத்தியில் அதிகம் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மாத்திரமன்றி, கடற்கரைப் பிரதேசத்திற்கு பயணிக்க இருக்கின்றவர்கள் மனதில் ஒருவித பீதி நிலையையும் தோற்றுவித்துள்ளது.

குறித்த சில கடற்கரைப் பிரதேசங்கள் தெரு மின்விளக்குகளின்றி இருளில் மூழ்கியுள்ளன. அவற்றில் கட்டாக்காலிகளின் நடமாற்றம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குடிநீர், கழிவறை வசதிகளேனும் இல்லாத அவலம் தொடருகின்றது. பொதுமக்கள் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான கழிவுத் தொட்டிகளும் இல்லை.

இவ்வாறான காரணங்களினால் குறித்த சில கடற்கரைப் பிரதேசங்கள் மனித சஞ்சாரமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன. உல்லாசத்திற்காகப் பயன்படுத்துபவர்கள் தொகையும் பெருமளவில் குறைவடைந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இதனை சாதகமாகப் பயன்படுத்தும் விஷமிகள் போதைப்பொருள் பாவனை, சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான நிலையில், அக்கரைப்பற்று கடற்கரையை துப்புரவு செய்யும் பணியை ஒருதொகுதி நல்லுள்ளம் கொண்டவர்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அக்கைரப்பற்று வோர்க்கஸ் யூனியன், சன்ரைஸ், ஏஸ், புளட்ஸ் கழக அங்கத்தினர்கள், முல்லைத்தீவு ஜும்மாப் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையினர். வை.எம்.எம்.ஏ.நிர்வாகிகள், சாரணர் சங்க அங்கத்தினர்கள், பொதுமக்கள் என அதிகமானோர் இப்பணியில் தங்களை ஈடுபடுத்தியுள்ளனர்.

இப்பணிக்கு அக்கரைப்பற்று மாநகர சபை பூரண உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாக பிரதான ஏற்பாட்டாளர் எம்.எச்.ஜெய்னுடீன் தெரிவிக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களும் இதனை சிறந்த முன்னுதாரணமாகக் கொள்ளலாம். கடற்கரை மாத்திரமன்றி, பிராந்தியத்திலுள்ள இயற்கைப் பிரதேசங்களை சுத்தம், சுகாதாரமாகப் பராமரிக்கும் பணிகள் எதிர்காலத்தில் கிரமமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.





முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# தமிழர் அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றுள்ள தலைவர் இரா. சம்பந்தன்

இலங்கைத் தமிழர் அரசியலில் மூத்த தலைவரும், தமிழரசுக் கட்சியின் காலஞ்சென்ற தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்களின் பூதவுடல் நல்லடக்கம் நாளை அவரது சொந்த இடமான திருகோணமலையில் நடைபெறவிருக்கின்றது.

அன்னாரின் பூதவுடலுக்கு முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த பூதவுடல் தற்போது திருகோணமலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கடந்த 1933 இல் பிறந்த இரா.சம்பந்தன், யாழ்ப்பாணத்தில் சம்பத்தரிசியார் பாடசாலை, மொரட்டுவை புனித செபஸ்தியான் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்றார். அதன் பிறகு, இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். அன்னாரின் மனைவி லீலாதேவி ஆவார். அவருக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என 3 பிள்ளைகள் உள்ளனர்.

1956 ஆம் ஆண்டு இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் இரா.சம்பந்தன் இணைந்தார். 1977 இல் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி அங்கம் வகித்த தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் திருகோணமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன் முறையாக எம்.பி. ஆனார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளர், துணைத்தலைவர், இணை பொருளாளர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார். கடந்த 2004 இல் இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து, இரா.சம்பந்தன் தலைமையில், அந்த ஆண்டு நடைபெற்ற இலங்கை பாராளுமன்ற தேர்தலில் 22 இடங்களில் வெற்றி பெற்றது.

அமரர் அ.அமிர்தலிங்கத்துக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆவது தமிழரான இரா.சம்பந்தன், 2015_ 2018 காலகட்டத்தில் அப்பதவியில் இருந்தார். தனது 68 ஆண்டு கால அரசியல் வாழ்வில் இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக அவர் குரல் கொடுத்தார்.

இந்த நிலையில், வயது மூப்புகாரணமாக ஏற்பட்ட உடல்நலக்குறைவால் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இரா.சம்பந்தன் கடந்த 30 ஆம் திகதி இரவு 11 மணியளவில் காலமானார்.

இரா.சம்பந்தன் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட இலங்கையின் அரசியல் தலைவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இரா. சம்பந்தன் மறைவினால் இலங்கைத் தமிழர் அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக பலரும் தெரிவித்துள்ளனர். அன்னார் காலமான செய்தி உலகெங்கும் தமிழ் பேசும் மக்களை துயரத்துக்கு உள்ளாக்கியுள்ளது.



## நாளை மாலை விடைபெறுகிறார்

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் வாழும் தேசமெங்கும் இருந்து அரசியல் தலைவர்களும், அபிமானிகளும் அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக இலங்கைத் தமிழர் அரசியலில் முக்கிய பங்கு வகித்த இலங்கையின் மூத்த அரசியல்வாதி என்ற பெருமைக்கு உரியவர் இரா. சம்பந்தன் ஆவார். இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமை கோரும் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெறுவதற்காக நீண்ட காலம் பணியாற்றியவர் அவர். அதேவேளை தமிழ் பேசும் இரு சமூகங்களுக்காகவும் அவர் குரல் கொடுத்து வந்துள்ளார்.

பல தசாப்தங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சம்பந்தன், தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி உறுதியான, இடைவிடாத குரலை எழுப்பியவர். அவர் பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலைகளைத் தாண்டிவந்த தலைவர் அவர். தமிழர்களின் நலனை மனதில் வைத்து தனது பயணத்தைத் தொடர்ந்தவர். தமிழர்களுக்கு ஏதாவது ஒரு தீர்வு தனது வாழ்நாளிலேயே வரும் என அவர் நம்பியிருந்தார்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச நாடுகளுடனும் இணைந்து செயற்பட்ட தலைவர்களில் சம்பந்தனுக்கு முக்கிய இடம் இருக்கிறது.

இலங்கைச் சூழல் குறித்து இந்தியாவுக்கு பல தருணங்களில் சம்பந்தன் கடிதம் எழுதியிருக்கிறார். அது தொடர்பாக பதில் ஏதும் வராத போதும் தனது முயற்சிகளை அவர் கைவிடவில்லை.

மனித உரிமை மீறல் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழர் பகுதிகளில் இடம்பெறும் அத்துமீறிய குடியேற்றம், காணிப் பிரச்சினைகள் உட்பட தமிழர்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த முக்கிய தலைவராக சம்பந்தன் இருந்தார்.

தனது மறைவின் மூலம் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை இலங்கைத் தமிழர் அரசியலில் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார் சம்பந்தன்.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பிறகான தமிழர் அரசியலில் சம்பந்தனுக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது. சம்பந்தனைப் பொறுத்தவரை, இலங்கையில் தமிழ் தேசிய அரசியலை ஒன்றிணைக்கக் கூடிய நிலையில் இருந்தார். அவர் இல்லாவிட்டால் தமிழர் அரசியல் என்றோ சிதறிப் போயிருக்கும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற முக்கிய தமிழ்த் தலைவர்கள் புலிகளால் கொல்லப்பட்ட நிலையில்தான் சம்பந்தன் தலைமைத்துவத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தலைவர்களை புலிகள் அடுத்தடுத்துப் படுகொலை செய்த போது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்தவரென்ற பெருமையும் சம்பந்தனுக்கு உண்டு.

நீண்ட நாட்களாகவே உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த சம்பந்தன், பாராளுமன்றத்திற்குச் செல்வதிலிருந்து விடுப்பு எடுத்திருந்தார். உடல்நலம் மோசமடைந்த நிலையில், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனின்றி காலமானார்.

---

# அன்னமிட்டு அறிவூட்டும் 'ஐயமிட்டுண்' அமைப்பின் ஈராண்டு நிறைவு

வடக்கு, கிழக்கு, மலையகம் எங்கும் பல்லாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு அன்னமிட்டு அறிவூட்டும் 'ஐயமிட்டுண்' நிறுவனம் பல சாதனைகள் படைத்து மூன்றாவது ஆண்டில் ஜூலை 2 ஆம் திகதி கால்தடம் பதித்தது.

'இல்லை என்று வந்த ஏழைகளுக்கு தானம் இட்டு, தானும் உண்ண வேண்டும்' என்பதே ஐயமிட்டுண் என்பதன் கருப்பொருளாகும். இல்லாதவர்க்கு தானம் இடுவது தருமங்களுள் சிறந்த தானமாகும்.

ஔவையாரின் ஆத்திச்சூடி வரிகளுக்கு ஏற்ப இலங்கையில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளின் வாழ்க்கையை மாற்றுவதை 'ஐயமிட்டுண்' அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

2022 ஜூலை ஆரம்பமாகி, இரண்டாவது வருட நிறைவில் அன்னமிட்டு அறிவூட்டிய ஐயமிட்டுண் அமைப்பின் சாதனைகள் பல.

மூன்றாவது ஆண்டில் தடம் பதிக்கும் ஐயமிட்டுண் அமைப்பு, "உண்பதற்கு முன் ஏழைகளுக்கு உணவைப் பகிர்ந்துகொள்ளுங்கள்" என்று போதிக்கும் ஆழமான கொள்கையின் அடித்தளத்தினை பின்பற்றுகிறது.

வடக்கு, கிழக்கு, மலையகம் என எவ்வித பேதமின்றி பின்தங்கிய எல்லைக் கிராமங்களில் அனைவருக்கும் தமிழ் மாணவர்களுக்கு கல்வி கிடைப்பதற்கு, புலம்பெயர்ந்த உறவுகள் பங்களிப்புடன் பல நலத்திட்டங்களை ஐயமிட்டுண் அமைப்பினர் செய்து வருகின்றனர்.

குடும்பத்தில் ஒருவருக்காவது கல்வியைப் போதித்தால் அதன் மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். தாயகத்தில் மாணவர்கள் கல்வியைப் பெற பல தடைகள் காரணமாக உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதே ஐயமிட்டுண் அமைப்பின் நோக்கமென அதன் நிறுவனரான முரளிதரன் செல்வராஜா தெரிவித்துள்ளார்.





ஐயமிட்டுண் நிறுவனர் முரளிதரன் செல்வராஜா

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வேளை உணவளிக்கும் வகையில் ஐயமிட்டுண் திட்டம் வடக்கு, கிழக்கு, மலையகம் என பல பின்தங்கிய பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது.

இதன் மூலம் தங்களால் இயன்ற பொருட்களை பாடசாலை மாணவர்கள் கொண்டு வந்து பெற்றோர் இணைந்து உணவைத் தயாரித்து பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்து உண்கின்றனர்.

ஐயமிட்டுண் திட்டம் மூலம் ஒருநாளைக்கு 2500_ 3000 வரையான மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. இதன்மூலம் பாடசாலைக்கு மாணவர் வருகை 100 வீதம் அதிகரித்துள்ளது.

அத்துடன் 30000 வரையான மாணவர்களுக்கு கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக வகுப்புகளை அணுக முடியாத மாணவர்களுக்கு வகுப்புகளின் பதிவுசெய்யப்பட்ட காணொளிகள் மற்றும் செயலட்டைகளை உள்ளீடு செய்து வழங்க விரலி நினைவகங்கள் (pen drive) வழங்கப்பட்டு வருகின்றன.

தாயகத்தில் மின் கட்டணம், மின்வெட்டு என்பதை எதிர்கொள்ளும் வகையில் சூரியசக்தி மூலம் திறன் வகுப்பறை (Solar power digital class room) அமைக்கப்பட்டுள்ளது. இதன் முதல்கட்டம் கிளிநொச்சி அம்பாள்புரம் பகுதி பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பேதமின்றி நாம் செயற்பட்டு வருகிறோம். அதேபோல நாட்டில் கல்விக்கு உதவ புலம்பெயர் உறவுகள் பங்களிக்க வேண்டும் என ஐயமிட்டுண் நிறுவனர் முரளிதரன் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

### ஐயமிட்டுண் நிகழ்கால திட்டங்கள்:

பின்தங்கிய குழந்தைகளிடையே பசியை எதிர்த்துப் போராடுவதற்கும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கும், அவர்கள் கற்றுக்கொள்வதற்கும் செழிக்கும் ஆற்றலை உறுதிப்படுத்தல்.

இதன் மூலம் மாணவர்களுக்கு ஊட்டமளிக்கும் உணவை வழங்குதல். அத்துடன் சிறந்த ஆரோக்கியத்தையும் கல்வி வெற்றிக்கான செறிவையும் வளர்க்க உதவுதல்.

அத்துடன் மேம்பட்ட கற்றல் வாய்ப்புகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் ஒன்லைன் ஆதாரங்களுக்கான அணுகலை வழங்குதல். குழந்தைகளை டிஜிட்டல் கல்வியறிவு திறன்களை வளர்த்து, அறிவின் உலகத்தைத் திறந்து அவர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துதல்.

மாணவர்களின் முக்கியமான பரீட்சைகளில் விரிவான தயாரிப்புப் பொருட்களுடன் அவர்களுக்கு உதவுதல். இதன் மூலம் மாணவர்கள் நம்பிக்கை மற்றும் திறமையை அதிகரித்தல். இதனால் தேர்ச்சி விகிதங்கள் மற்றும் கல்வி செயல்திறன் கணிசமாக மேம்படுத்துகிறது.

வரையறுக்கப்பட்ட இணைய அணுகல் உள்ள பகுதிகளுக்கு கல்வி உள்ளடக்கத்தை வழங்குதல். பென்ட்ரைவ் திட்டம் தொடர்ச்சியான கற்றலை உறுதி செய்தல். இதனால் தொலைநிலைக் கல்வியை எளிதாக்கி, ஆதரவு தேவைப்படும் நூற்றுக்கணக்கான மாணவர்களைச் சென்றடைகிறது.




ஐயமிட்டுண் பதாகையின் கீழ், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு தேவையான கல்வி மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கு நாங்கள் பாடுபடுகிறோம். ஒவ்வொரு குழந்தையும் வாழ்வதற்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் செழிக்க ஒரு வாய்ப்புக்கு தகுதியானது என்ற நம்பிக்கைக்கு எங்கள் பணி ஒரு சான்றாகும் என்று முரளிதரன் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு குழந்தையும், அவர்களின் பின்னணியைப் பொருட்படுத்தாமல், கல்வி மற்றும் சுகாதாரத்தின் வலுவான அடித்தளத்துடன் தங்கள் கனவுகளைத் தொடர நாங்கள் உதவி செய்கிறோம் என்றார் அவர்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவில் பதிவுசெய்யப்பட்ட ஐயமிட்டுண் அறக்கட்டளை நிறுவனம் கொவிட் தொற்று காலத்தின் போது பருத்தித்துறையில் கதிரியக்கவியல் துறையை கட்டியெழுப்புவதிலும் உதவியது.

கடந்த பல வருடங்களாக, வடக்கு, கிழக்கு மற்றும் இலங்கையின் மத்திய, ஊவா மாகாணத்தின் பகுதிகளின் தொலைதூரப் பிரதேசங்களில் கல்வியை மேம்படுத்த ஐயமிட்டுண் பல வழிகளில் பங்களித்துள்ளது.

ஐயமிட்டுண் குழுமத்தின் இரண்டாவது வருட நிறைவின் சாதனையாக நடுநிலை, மேல்நிலைப் பாடசாலைக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. பாடசலை மாணவர்களின் வரவை 100% ஆக்குவதன் மூலம் சகல கல்வி செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

---

# கலகெதர முஸ்லிம் வித்தியாலயத்திற்கு குவைத் உதவியில் இருமாடி கட்டடம்



பாதுக்க கலகெதர முஸ்லிம் வித்தியாலயத்திற்கு குவைத் நாட்டின் உதவித் திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா ஹிமா இஸ்லாமிக் சேவிஸ் நிறுவனத்தின் ஊடாக இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் கல்லூரி அதிபர் எம்.எம்.எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு குவைத் தூதுவரின் பிரதிநிதியாக கொழும்பில் உள்ள குவைத் தூதுவராலயத்தின் அதிகாரி அஷ்சேக் எம்.பிர்தௌஸ் (நளிமி) பங்கேற்றார். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் முஜிபுர் ரஹ்மானும் அதிதியாக கலந்து கொண்டார்.

அத்துடன் ஸ்ரீலங்கா ஹிமா இஸ்லாமிக் சேவிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஏ.ஏ நூறுல்லாஹ் (நளிமி) மற்றும் இந்நிறுவனத்தின் தலைவர் அமீனுள்ளா, பாதுக்க பள்ளிச் சங்க உபசெயலாளர் எம்.எஸ்.எம். சவ்பான், ஹோமாகம பிரதேச கல்வி அதிகாரிகள், பாதுக்க பிரதேச செயலாளர், பாதுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, திஹாரிய அல் அஸ்கர் பாடசாலையின் அதிபர் ஏ.ஜே.எம்.புர்கான் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள்,பெற்றோர், மாணவர்கள், ஊர்ப்பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இங்கு உரையாற்றிய அஷ்ஷேக் பிர்தௌஸ் நளிமி "குவைத் அரசாங்கம் இலங்கைக்கு பாரிய அளவில் உதவிகளைச் செய்து வருகின்றது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம், குவைத் வீடமைப்பு திட்டங்கள், குவைத் மருத்துவ நிலையங்கள் மட்டும் அன்றி 40க்கும் மேற்பட்ட பின்தங்கிய பாடசாலைகளில் இவ்வாறான கட்டடங்களை நிர்மாணித்து இந்த நாட்டின் கல்விக்கு உதவி செய்து வருகின்றது" என்றார்.

அஷ்ரப் ஏ சமத்...

## தொழில் கட்சி...

மொத்தமுள்ள 650 இடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தலில், தொழிலாளர் கட்சியின் கெயர் ஸ்டார்மர் முன்னிலை வகித்து வருகிறார். நேற்றுக் காலை நிலவரப்படி, 410 க்கும் மேற்பட்ட இடங்களில், தொழில் கட்சி வெற்றிப் பெற்றுள்ளது. ரிஷி சுனக்கின் கன்சர்வேடிவ் எனப்படும் பழமைவாத கட்சி 114 இடங்களில் மட்டுமே நேற்று காலை வென்றுள்ளது.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடந்து வருவதால், ரிஷி சுனக், ஆட்சியை இழப்பது உறுதியானதால், அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதனையடுத்து புதிய பிரதமராக கியர் ஸ்டாமர் பதவியேற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது இதன் மூலம் பிரிட்டனில் 14 ஆண்டுகளுக்குப் பின்னர் தொழிலாளர் கட்சி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. அத்துடன் பிரிட்டன் தேர்தல் வரலாற்றில் மோசமான ஒரு தோல்வியை கன்சர்வேடிவ் கட்சி சந்தித்திருக்கிறது.

புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள கியர் ஸ்டாமர் 2020 ஆம் ஆண்டு தொழிலாளர் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மகிழ்ச்சி மிகுந்த தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய கியர் ஸ்டாமர், "நாம் சாதித்துவிட்டோம்" என்றும் மாற்றம் இப்போது தொடங்குகிறது" என்று கூறினார்.

தோல்வியை ஒப்புக் கொண்டு அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக ரிஷி சுனக் தெரிவித்துள்ளார். 2019 தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி 364 இடங்களைக் கைப்பற்றியதால், போரிஸ் ஜான்சன் பிரதமரானார். ஆனால் இம்முறை நிலைமை முற்றிலும் எதிர்மாறாக உள்ளது. பிரிட்டனில் ஆட்சி அமைக்க 326 இடங்களைப் பெற வேண்டும்.

நேற்று காலை வரை வெளியான முடிவுகளின்படி தொழிலாளர் கட்சி – 410 இடங்களையும் கன்சர்வேடிவ் கடசி 119 இடங்களையும் லிபரல் டெமாக்ரடிக் கட்சி 71 இடங்களையும்பெற்றுள்ளன.

2019 தேர்தலில், எதிர்க்கட்சியான தொழில் கட்சி 203 இடங்களை மட்டுமே பெற்றது. பாரம்பரியமாக வெல்லக்கூடிய பல இடங்களிலும் தோல்வி கண்டது. கருத்துக் கணிப்புகளின்படியே எல்லாம் நடந்தால், 1997 இல் டோனி பிளேர் பெற்ற வெற்றிக்கு சற்றே நிகரானதாக தற்போதைய தொழிலாளர் கட்சியின் வெற்றி இருக்குமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

56 இடங்களைக் கைப்பற்றுமென எதிர்பார்க்கப்படும் லிபரல் டெமாக்ராட் கட்சி இந்தத் தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பிடிக்கக்கூடும். கருத்துக் கணிப்புகளின்படி, ஸ்காட்டிஷ் தேசியக் கட்சியின் இடங்களின் எண்ணிக்கை 10 ஆகக் குறையக்கூடும்.

அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட இடங்களில் தொழிலாளர் கட்சிக்கு ஆதரவு குறைவாக இருப்பது இதுவரையிலான முடிவுகளில் தெரியவந்திருக்கிறது. 10% க்கும் அதிகமான மக்கள் முஸ்லிம்களாக அடையாளம் காணும் இடங்களில் தொழிலாளர்களின் வாக்குகள் சராசரியாக 10 வீதம் குறைந்துள்ளன என்று பிபிசி குறிப்பிட்டுள்ளது. ஏப்ரல் 2020 இல், தொழிலாளர் கட்சியின் புதிய தலைவராக கியர் ஸ்டாமர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்டார்மருக்கு 61 வயது. அவர் ஒரு சட்டத்தரணி கியர் ஸ்டாமர், 2015ஆம் ஆண்டு முதல் முறையாக எம்.பி.யானார். தொழிலாளர் கட்சியின் தலைவருக்கான தேர்தலின்போது, முதல் சுற்றிலேயே கியர் ஸ்டாமர் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார். கட்சியின் தலைவரான பிறகு, "இந்த மாபெரும் கட்சியை புதிய நம்பிக்கையுடன் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி அழைத்துச் செல்வதே தனது நோக்கம்" என்று கூறியுள்ளார்.

## புதுடில்லி வருமாறு...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையை நேற்று அவர் உறுதி செய்தார்.

தடைப்பட்டுள்ள இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுக்களை மீண்டும் முன்னெடுத்து, இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தை தீர்ப்பதற்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரும் வடமாகாண ஆளுநருமான திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (05) நடைபெற்றது.

இக் கூட்டத்தில், மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட போது, இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடு காரணமாக பாதிக்கப்படும் தங்களுடைய வாழ்வாதாரம் தொடர்பாக போதிய கரிசனை வெளிப்படுத்தப்படுவதில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்த போதுகூட தமிழ் மக்களின் பிரதிநிதிகளினால் கடற்றொழிலாளர் விவகாரம் பேசப்படவில்லையென்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையிலேயே தனக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் கடற்றொழிலாளர் விவகாரம் விரிவாக பேசப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் காணப்படும் போதைப்பொருள் பரவல் மற்றும் சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்தல், வீதி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களை ஆராய்ந்து சரியானவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, சட்டத்துக்கு முரணான வகையில் சுண்ணக்கல் அகழப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனினால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுக்களில் உண்மை இல்லை என்பதை கள விஜயங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்ணக்கல் அகழ்வு என்பது ஆயிரக்கணக்கானோரின் வாழ்வாதாரமாக இருக்கின்றதால், உரிய நியமங்களின் அடிப்படையில் சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, அகழப்படுகின்ற சுண்ணக்கல், வர்த்தக நோக்கோடு வெளி மாவட்டங்களுக்கு சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுகின்ற பட்சத்தில் அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கான பொறிமுறையை, சட்ட ஏற்பாடுகளை விரிவாக ஆராய்ந்து ஆதற்கேற்ப உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இன்றைய கூட்டத்தில், மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மற்றும் மாகாண திணைக்களங்களின் பிரதானிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாட்டில் முட்டை பாவனை...

வரை அதிகரித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சி, மீன் விலை உயர்வு, முட்டையின் ஊட்டச்சத்து மதிப்பு குறித்து பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு போன்ற காரணங்களால் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதாகவும் சுகாதாரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. நாட்டில் அதிக கோழி இறைச்சி உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் பதிவாகியிருப்பதாகவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கையொன்றை சுட்டிக்காட்டி விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்அமைச்சினால்நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் விவசாய, தொழில்முனைவோர் கிராமத் திட்டத்தின் கிராமங்கள் கேகாலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இதுதொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் (04) நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

## கட்சி தலைமையகத்தின்...

முன்பு அவர் இவ்வாறு கையெழுத்திட்டு பதவியேற்றார். இதேவேளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு அருகில் நேற்று பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று (05) காலை கொழும்பு டார்லி வீதியிலுள்ள தனது கட்சித் தலைமையகத்துக்கு வருமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கட்சியின் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் அலி சப்ரி...

உறவை குறிப்பாக பொருளாதாரத் துறையில் மேம்படுத்துவது மற்றும் அதிக ஜப்பானிய முதலீட்டை நாட்டிற்கு வழங்குவது குறித்து கலந்துரையாடியதாகவும் கூறினார். இலங்கையின் நீண்டகால நண்பரான முன்னாள் பிரதமர் ஃபுகுடா யசுவோ இலங்கைஜப்பான் இருதரப்பு உறவுகளை சீராக மேம்படுத்துவதில் ஆர்வத்துடன் செயல்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் வேலைவாய்ப்புகள்...

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் நவோர் கிலோனுக்கும் இடையிலான சந்திப்பொன்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது இலங்கையருக்கான இஸ்ரேலின் வேலை வாய்ப்புகள் மற்றும் தற்போது இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையரின் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக இலங்கையிலிருந்து பயிற்சியற்ற தொழிலாளர் கூட கோரப்பட்டது. எனினும் இஸ்ரேலுக்குச் சென்ற சில இலங்கையரின் நடத்தை மற்றும் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளால் இஸ்ரேலிலுள்ள விவசாய தொழில் முயற்சியாளர் தற்போது இலங்கை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் தயக்கம் காட்டுகின்றனர். இஸ்ரேலிலுள்ள சில இலங்கையர் இலங்கையில் போன்று போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான தீர்வாக இஸ்ரேலிய விவசாய தொழில் முயற்சியாளர்களை இலங்கைக்கு வரவழைத்து பொருத்தமான நபர்களை அவர்களுடன் கலந்தாலோசிக்க ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. அடிப்படை ஆவணங்களைக் கொண்டுள்ளவர்கள் இஸ்ரேலிய முதலீட்டாளர்களால் குழுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்கள் பரிசீலிக்கப்படுவர். விவசாயத்துறை அன்றி கட்டுமானம், தாதியர் பராமரிப்பாளர், ஹோட்டல் போன்றவற்றில் பல வேலை வாய்ப்புகள் உள்ளன. விவசாயத் துறைக்கு தகுதியற்ற தொழிலாளர், ஆனால் தற்போது இஸ்ரேலுக்குச் செல்ல தகுதியுடையவர்கள், மற்ற வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு உண்டு. இஸ்ரேலில் பாரிய அளவிலான கட்டுமானத் திட்டங்களுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மின்சாரம், பெற்றோலியம்,...

மற்றும் எரிபொருள் விநியோகம் அல்லது விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ். பி ஏக்கநாயக்கவினால் நேற்று முன்தினம் (04) வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக, இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் எந்தவொரு அரசாங்க நிறுவனமோ, திணைக்களமோ, உள்ளூராட்சிமன்றமோ, கூட்டுறவுச் சங்கமோ அல்லது அவற்றின் கிளையோ வழங்கும் சேவைகள் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கு அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## ...24 மணி நேரத்துக்குள்...

கஞ்சா, 01 கிலோ 100 கிராம் மாவா, 550 கிராம் 700 மில்லி கிராம் மதன மோதகலேகியம், 86 கிராம் 18 மில்லி கிராம் போதைப்பொருள் மற்றும் 1,085 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செயயப்பட்ட 1,403 சந்தேக நபர்களில், 213 நபர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் 17 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் .

பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புடைய 04 சந்தேகநபர்கள் வியாழக்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரையான காலப்பகுதிக்குள் பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புகளை வைத்திருந்த 795 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மூன்று மாடி வர்த்தக...

அக்குறணை ஏ9 வீதியிலமைந்துள்ள இம்மூன்று மாடிக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் கண்டி மாநகர சபை தீ அணைப்புப் பிரிவினரும் பொலிசாரும், பிரதேச மக்களும் இணைந்து மற்றைய கட்டடங்களுக்கு தீ பரவாதவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிமுதல் கண்டி – மாத்தளை பிரதான வீதியில் அக்குறணை பிரதேச வீதி மூடப்பட்டிருந்தது. கண்டி மாத்தளை வீதி வழியாகப் பயணிக்கும் தூர இடங்களுக்கான பஸ்கள் மற்றும் வாகனங்கள் வத்துகாமம் வழியாக அனுப்பிவைக்கப்பட்டன.

அக்குறணை 06ஆம் மைல்கல் மற்றும் 07ஆம் மைல்கல் பிரதேசங்களுக்கிடைப்பட்ட பெயார்லைன் ஆடைத் தொழிற்சாலை அமைந்திருந்த இடத்திலுள்ள உணவகம் மற்றும் பேக்கரியுமே இவ்வாறு தீப்பற்றி பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கு சுமார் 50 சமையல் எரிவாயு சிலிண்டர் உள்ளே இருந்ததாக அதன் உரிமையாளர் தெரிவித்தாகவும், இதனால் தீயைக் கட்டுப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் அறியப்படவில்லையெனவும் இது தொடர்பாக அளவத்துகொடை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பினால்...

அரசாங்கத்தை பொறுப்பேற்க தலைவர்கள் எவரும் முன்வராத நிலையிலேயே தான் அரசாங்கத்தை பொறுப்பேற்றுக் கொண்டதாக தெரிவித்த ஜனாதிபதி, சரியான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளதாக தெரிவித்தார். நாட்டை புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கி கொண்டு செல்வதற்காக குருநாகல் மாவட்டம் புதிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விரிவான அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"குருநாகல் மாவட்டத்தில் நாட்டிற்கு சோறு தரும் விவசாயிகள் வாழும் பகுதியாகும். ஆனால் இன்னும் அவர்களுக்கான நில உரிமை கிடைக்கவில்லை. இன்று இந்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கானோர் சட்டரீதியான காணி உறுதிகள் இன்றி வாழ்கின்றனர். அவர்களுக்கு உரிமையை வழங்குவதற்காகவே உருமய திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம். மிகவும் கடினமான காலகட்டதிலேயே என்னால் ஆட்சியமைக்க நேரிட்டது. ஆட்சியைப் பொறுப்பேற்க தலைவர்கள் எவரும் அப்போது முன்வரவில்லை. ஆனாலும் நான் ஏற்றுக்கொண்டேன். பல கட்சிகளை ஒன்றிணைத்துக்கொண்டு ஆட்சியமைத்தேன். தற்போது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். இன்று இந்தப் பகுதி எம்.பி.க்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தமது வீடுகள் தீயிடப்பட்டதை மறந்துவிட்டு மக்களுக்கு நன்மை செய்ய முன்வந்திருக்கிறார்கள். இன்று நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது. கடனைத் திருப்பிச் செலுத்த எமக்கு 04 வருட கால அவகாசம் உள்ளது. மேலும், சுமார் 06 வருடங்கள் மிதமான சுமையுடன் கடனை செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும். செலுத்த வேண்டிய வட்டியில் ஒரு தொகை வெட்டி விடப்பட்டுள்ளது. அதனால் 05 பில்லியன் டொலர்கள் நாட்டுக்கு மீதமாகும்.

தற்போது தனியார் ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதன் படி சுமார் 03 பில்லியன் டொலர்கள் குறைவடையும். எனவே நாம் செலுத்த வேண்டிய பணத்தில் இருந்து மொத்தம் 08 பில்லியன் டொலர்கள் வெட்டிவிடப்படும். தளர்வான நிபந்தனைகளின் கீழ் 02 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சீனா , இந்தியாவின் உதவித் தொகைகள் அதற்குள் உள்ளடங்காது. இதன் மூலம் கடந்த இரண்டு வருடங்களில் 08 பில்லியன் டொலர்களை சேமித்துள்ளோம்.

நான் அரசாங்கத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில், இந்தியா எமக்கு மூன்றரை பில்லியன் டொலர்களை இலகு கடன் அடிப்படையில் வழங்கியது. மேலும் பங்களாதேஷும் 200 மில்லியன் டொலர்களை வழங்கியது. பொருளாதார சிக்கல்கள் இருந்தபோதிலும், நாம் 200 மில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்தியுள்ளோம்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நான் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. வற் வரியை அதிகரிப்பது எளிதானது அல்ல. ஆனால் பொருளாதாரத்தை சீரமைக்க அதைச் செய்ய வேண்டியிருந்தது. சில தலைவர்கள் மக்களை வீதிக்கு வந்து வீடுகளை எரிக்கச் சொன்னார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கக் கூடாது என்றார்கள். விவசாயிகளை மீண்டும் கொழும்புக்கு வருமாறு கூறினர். விவாசாயத்துக்கு தேவையான எரிபொருள் இல்லாமல் கொழும்புக்கு வர முடியாது. மக்களுக்கு எரிபொருள் மற்றும் உரங்களை வழங்கினோம். அப்போதும் கூட விவசாயத்தில் ஈடுபடாமல் விவசாயிகளுக்கு கொழும்புக்கு வருமாறு கூறினர்.

விவசாயிகள் 20222023 வரையில் பெற்றுத்தந்த அறுவடையின் காரணமாகவே இந்த நாட்டின் உற்பத்தி அதிகரித்தது. அதே நேரத்தில், சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடைந்தது. இவற்றுக்கு மத்தியில் 08 பில்லியன் டொலர் நிவாரணத்தையும் பெற்றுக் கொண்டு கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியை உருவாக்கியுள்ளோம். பொருளாதார வீழ்ச்சி சாதாரண மக்களையே பெருளவில் பாதிக்கிறது. ஆனால் பொருளாதார வளர்ச்சியின் இலாபத்தை ஒரு தரப்பு மாத்திரம் அனுபவிக்கிறது. அதனாலேயே உருமய திட்டத்தின் கீழ் மக்களுக்கு இலவச காணி உறுதிகளை வழங்கி சாதாரண மக்களுக்கும் அதன் பலன்களை பெற்றுக்கொடுக்க விருப்பினோம். பல தலைமுறைகளாக தாம் வாழ்ந்த காணியின் உரிமை இன்று மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தற்போதைய அரசாங்கத்தின் சாதனையாகும்.

மற்றவர்கள் சோசலிசம் பற்றி பேசுகிறார்கள். ஆனால் இதுதான் உண்மையான சோசலிசம். இதன் மூலம் மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படுகிறது. உலகில் இரண்டு நாடுகள் மட்டுமே இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளன. ஜப்பான் மற்றும் தென் கொரியா. ஆனால் இரு நாடுகளிலும் குறைந்த விலைக்கு காணி வழங்கப்பட்டன. ஆனால் நாங்கள் இதை இலவசமாக வழங்குகிறோம். இந்த வேலைத்திட்டத்தின் மூலம் இந்நாட்டில் காணி உரிமையாளர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்தினால் அதிகரித்துள்ளது.


அத்துடன் சமூர்த்தி வேலைத்திட்டத்தின் நன்மைகளை மூன்று மடங்கினால் உயர்த்துவதற்காக அஸ்வெசும திட்டத்தை செயற்படுத்தினோம். வங்குரோத்து அடைந்த நாட்டிலேயே இந்த திட்டங்களை செயல்படுத்தினோம். அரசாங்க ஊழியர்களுக்கும் கஷ்டங்களுக்கு மத்தியில் 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கினோம். எதிர்வரும் வருடங்களிலும் சம்பள அதிகரிப்பு குறித்து கவனம் செலுத்தலாம். இத்தோடு தனியார் துறையிலும் சம்பள உயர்வு கிட்டியது. சுற்றுலா துறையின் வருமானம் அதிகரித்தது. இன்று, நாட்டில் ஒரு நவீன சுற்றுலா வணிகம் உருவாகியுள்ளது. இதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.


கடந்த பொசன் போயாவின் போது நாடு முழுவதும் ஏராளமான தன்சல்கள் நடத்தப்பட்டன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்களுக்கு சாப்பிட உணவு இருக்கவில்லை. இன்று உங்களது கடின உழைப்பினால் அறுவடை செய்யப்பட்ட அறுவடையில் இருந்து இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தன்சல்கள் நடத்தப்பட்டன. இது தொடர்பில் வெளிநாட்டு தூதுவர்கள் ஆச்சரியப்பட்டனர். இதுவே நமது பலமாகும். அதே சமயத்தில் நாம் நாட்டு மக்களுக்கு தேவையான சகல நிவாரணங்களையும் வழங்குகிறோம். நாடும் முன்னேற்றம் கண்டு வருகிறது.

## இன்றைய பலன்கள் (06.07.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**

**மேஷம்:**

கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில ஆர்வம் காட்டுவீர்கள்.


**ரிஷபம் :**

விரையங்கள் அதிகரிக்கும். பணி உயர்வின் காரணமாக உங்கள் வாழ்க்கை துணைக்கு இடமாற்றம் வரலாம்.

**மிதுனம்:**

துணிந்து எந்த முடிவும் எடுக்க இயலாது. புதியவர்களை நம்பி செய்யும் முயற்சிகளில் விரையங்கள் அதிகரிக்கும்.

**கடகம்:**

வருமானம் உயரும். வாழ்க்கை தேவைகள் பூர்த்தியாகும். இடம் வாங்குவது மனை கட்டுவது போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**சிம்மம்:**

உத்தியோகத்தில் உள்ளவர்கள் கேட்ட சலுகைகளை வழங்க உயர் அதிகாரிகள் சம்மதம் தெரிவிப்பார். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**கன்னி:**

நிலப் பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தை பொறுத்தவரை உயரதிகாரிகளின் ஆதரவோடு நல்ல மாற்றங்கள் வந்து சேரும்.

**துலாம்:**


நினைத்தது நிறைவேறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உறவினர்களும் உடன் பிறப்புகளும் பகையாக மாறலாம்.

**விருச்சிகம்:**

மனை விற்பனை தொழில் செய்பவர்களுக்கு இது ஒரு பொற்காலமாக அமையும். பூமி விற்பனையால் லாபமும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும்.

**தனுசு:**

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. ஆரோக்கிய தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் கூடும்.

**மகரம்:**

கடன் வாங்குவது வீடு கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து கொடுப்பர்.

**கும்பம்:**

இல்லத்தில் மங்கள ஓசை கேட்பதற்கு வாய்ப்பு உண்டு. தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர்.

**மீனம்:**

பணியில் இருக்கும் தொய்வு அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். தந்தை வழி உறவினர் மூலம் பண வரவு உண்டு.

## ஜனாதிபதி தேர்தல்...

தெரிவித்துள்ளார். உருமய காணி உறுதி வழங்கும் வேலைத்திட்டத்துக்கமைய கிழக்கு மாகாணத்துக்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வு, மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் அதிகப்படியான வேலை திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எம்மிடம் உள்ளது.இந்த நாடு மிகப்பெரிய ஆபத்தான நிலையில் இருந்த வேளையில் நாம் அவர்களை கைவிட்டு ஓடிவிட முடியாது. ஒரு குறுகிய காலத்துக்குள்ளே எமது நாடு பொருளாதார ரீதியில் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. மக்கள் தலைவர்கள் என்பவர் வெளிச்சத்தை ஏற்பவராக இருக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தல் வர இருக்கின்றது. தினம் தினம் பல ஜனாதிபதி வேட்பாளர்கள் வந்து கொண்டே இருக்கின்றனர். நாடு பற்றி எரிந்த போது ஓடி ஒளிந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தல் என்றவுடன் நானும் ஜனாதிபதிதான் என்று கூவிக்கொண்டுள்ளனர். இதில் பலர் இந்த நாடு பற்றி எரிந்தபோது, நாட்டு மக்கள் தவிர்த்தபோது வீட்டு மூலைக்குள் ஒளிந்திருந்தவர்களும் இந்த நாடு இன்னும் நூறு வருடத்திற்கு மேல் எழமுடியாது என்று அறிக்கை விட்டவர்களுமே இவர்கள் தான்.

நாம் இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். அப்போது நாட்டை பொறுப்பெடுத்த தலைவர் நாட்டை விட்டு ஓடவில்லை. களத்தில் நின்று தான் மக்களுக்காக இறுதிவரை போராடினார் என அவர் இதன் போது தெரிவித்தார்.

## பிரிட்டன் பாராளுமன்றத்தில்...

14 ஆண்டுகளுக்கு பின்னர் ஆட்சி அமைக்கிறது. அவர் போட்டியிட்ட தொகுதியில் மொத்தம் 54.18 சதவீத வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்தினர். அதில் 19,415 வாக்குகளை உமா குமரன் பெற்று வெற்றி பெற்றுள்ளார். கிழக்கு லண்டனில் பிறந்து, வளர்ந்தவர் உமா குமரன். இவரது பெற்றோர் இருவரும் இலங்கையை சேர்ந்தவர்கள். கடந்த 1980களில் உள்நாட்டு போரின் போது பிரிட்டனில் அவர்கள் குடியேறி உள்ளனர். அங்குள்ள குயின் மேரி பல்கலைக்கழகத்தில் படித்துள்ளார். தற்போது ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போவில் வசித்து வருகிறார்.

## படைப்பாளர், சட்டத்தரணி...

நோய்வாய்ப்பட்டு தனது 84 ஆவது வயதில் நிந்தவூரில் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். சிக்கந்தல் லெப்பை சின்னதம்பி, மீரா உம்மா ஆகியோரின் மகனாக அவர் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார். பின்னர் கொழும்பு சட்டக் கல்லூரியில் கற்று சட்டத்தரணியானார். இயல்பிலேயே சிறுகதை மற்றும் கவி புனையும் ஆற்றல் கொண்டிருந்த அவர், தன் ஓய்வு நேரத்தில் கிழக்கிலங்கை நாட்டாரியலை ஆய்வுப்பொருளாக எடுத்துக் கொண்டிருந்தார். இலங்கையின் சிறந்த உருவகக்கதை படைப்பாளரான அவர், நூற்றுக்கும் மேற்பட்ட உருவகக் கதைகளை எழுதியுள்ளார். அவரது முதல் உருவகக் கதைத் தொகுதி 1982ஆம் ஆண்டு வெளியானது.

## வீதியின் நடுவே கனரக லொறி...

கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். மொனராகலையிலிருந்து பயணித்த லொறியொன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் நடுவே கவிழ்ந்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் நீல் குமார ரத்நாயக்க (38), எஸ். ஜயசிங்க (40), டபிள்யூ.எம்.நிமல் (35) மற்றும் என்.கிருஷாந்த (31) ஆகியோர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆர்.எம்.சுதுபண்டா (58), டி.எம். சிறில் (39), டி.எம்.திசாநாயக்க (40) ஆகிய மூவரும் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நல்லிணக்கத்தினூடாக... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*நல்லிணக்கம், சமத்துவம் மற்றும் சமத்துவம் என்ற செய்தியை ஏற்றுக் கொள்வதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கை சமூகத்தை சென்றடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் பற்றிய செய்தியை அவர் பகிர்ந்து கொண்டார்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையில் ஜூன் 13 அன்று இலங்கையில் உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் இலவச பாடநெறிகளுக்கு பயனர்களுக்கு வழிகாட்டும் "பொது கற்றல் கல்வி தளம்" அறிமுகப்படுத்தப்பட்டதற்கு அவர் டாக்டர் பங்கஜுக்கு நன்றி தெரிவித்தார்.*

# கிழக்கின் குரல்



## புதிய பொதுச் சந்தை தொகுதிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு





**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளின் கீ ழ் உள்ளூர் மேம்பாட்டு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உலக வ ங்கியின் நிதி உதவியுடன் 21 மில்லியன் ரூபா செலவில் மண்முனை மேற்கு பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள புதிய சந்தை தொகுதிக்கான அ டிக்கல் நாட்டு நிகழ்வு மண்முனை மேற்கு பிரதேச சபை செயலாளர் கிருஷ்ணபிள்ளை தலைமையில் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி சத்யானந்தி நமசிவாயம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சபேசன் பிரதேச சபையின் ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உற்பத்தி துறையை அதிகரிக்கின்ற ஒரு பிரதேசமாக இது உள்ளது. எனவே இந்த புதிய சந்தை தொகுதி மூலம் இப்பகுதி விவசாயிகள் அதிக நன்மை அடையவுள்ளதாக இராஜாங்க அமைச்சர சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

## பாண்டிருப்பில் முதியோர்களுக்கான இலவச நடமாடும் சேவை

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



கல்முனை பாண்டிருப்பு பூரணகேள்வன் சர்வோதய சிரமதான சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய முதிர் உதவி (ஹெல்ப் ஏஜ்) தொண்டு நிறுவனத்தினால் இலவச நடமாடும் சேவை பாண்டிருப்பு மத்திய கலாசார மண்டபத்தில் சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர், ஓய்வு நிலை அதிபர் இ. இராஜரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் ராகுலன், சர்வோதய சமூக நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எம்.எச்.எம். பைசால் உட்பட பலர் கலந்து கொண்டனர். கல்முனை 1A கிராம அபிவிருத்தி சங்கத்தின் இணை அனுசரணையில் நடைபெற்ற வைத்திய முகாமில் கண்பரிசோதனைக் குழுவினர், மருத்துவ உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கண் பரிசோதனை, இரத்தப்பரிசோதனை, உயரம், நிறை , இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைகள் தேவைப்படுவோர் இனங்காணப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டனர். கண் பரிசோதனை செய்தவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுக் சென்ற ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பிரதி அதிபர் எம். எச். றசாமின் ஒருங்கமைப்பில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதன் அதிபர் ஏ.எல். பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அத்தோடு பிரதி அதிபர்களான ஏ.ஜி. சமூர், எம்.ஏ. உனைஸ் ஆகியோர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மேலும் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கு பொன்னாடை, நினைவுச்சின்னம், வாழ்த்துப்பா என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் கோரிக்கை



முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கைகளை விரைவாக தீர்க்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்து 15 வருட காலமாகியும் இன்னும் வட, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்தினரின் காணி, கல்வி, மீள்குடியேற்றம், வீட்டுத் திட்டம் போன்ற ஒரு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தாலும் அவை முறையாக இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அதேபோன்று கடந்த யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் வன்செயலால் பாதிக்கப்பட்டு வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தங்களுடைய சொத்து சுகங்களை இழந்து தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக அவர்களுடைய காணிப் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை.

வடகிழக்கில் உள்ள அரச திணைக்களங்களின் உயர்மட்ட அரச அதிகாரிகளில் ஒரு சிலர் பொறுப்பற்று செயற்படுகின்றனர். எனவே இப் பிரச்சினைகளை தீர்க்க விசேட ஆணைக் குழுவொன்று அமைக்க வேண்டும்.

அத்துடன் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள அரச திணைக்களங்களுக்கு உயர் அதிகாரிகளாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளை நியமனம் செய்வதன் மூலம் துறை சார் நிபுணத்துவம் சிறந்த முறையில் நடைபெறும். அதேபோல் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்க விசேட ஆணைக்குழுவொன்று அமைக்க ஜனாதிபதி அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார். அந்த நம்பிக்கை உள்ளதாக அவர் தெரிவித்தார்

## காரைதீவில் இரா.சம்பந்தன் ஐயாவுக்கு இதய அஞ்சலி!!

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வானது.

தமிழரசுக்கட்சியின் காரைதீவுக்கிளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷின் தலைமையில் காரைதீவில் நேற்று இரவு 7.30மணியளவில் இடம்பெற்றது.

இவ்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை உதவி செயலாளர், கட்சி ஆதரவாளர்கள், மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

சம்பந்தன் ஐயாவின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடிஸ்வரன் தனது இரங்கல் உரையில் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய பெருந்தலைவரை அனைவரும் இழந்து நிற்கின்றோம் அதுமட்டுமன்றி அரசியலுக்கு உள்நுழைந்த காலம் முதல் தனது 91 வயது வரை அஹிம்சை வழியில் போராடி இராஜதந்திர நுட்பங்களை கையாண்ட தலைவர் சம்பந்தன் ஐயா என்றும் ஐயாவின் வெற்றிடத்தை இனி எவராலும் ஈடு செய்ய முடியாது என்ற கருத்தையும் தெரிவித்தார்.

## மொழிபெயர்ப்பாளராக நியமனம்



**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலை, றொட்டவெவயைச் சேர்ந்த எஸ்.எம்.றசீன் சிங்கள தமிழ் மொழி சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நீதவான் எம்.கணேசராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அரசாங்க தகவல் திணைக்களத்தில் தகவல் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

## கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் இலவச மருத்துவ முகாம்கள்

**கந்தளாய் கிண்ணியா தினகரன் நிருபர்கள்**

கதிர்காம பாதயாத்திரிகர்கள் நலன்கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாம்கள் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் நடைபெற்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமின் போது, 2000 பாதயாத்திரீகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டது. இதனை அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அப்துல் சலாமின் ஒத்துழைப்போடு அவரின் கரங்களினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரின் அறிவுறுத்தல்களின் கீழ் கல்முனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ பிரதி மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலின் மேற்பார்வையில் 1000 பேருக்கு நோய் எதிர்ப்பாற்றல் மருந்து, (இமியூன் வூஸ்ட்டர் பானம்) உடல் உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும், பாம் போன்ற பல மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## 'நிதர்சனத்தின் நிழல்' நூல் வெளியீடு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**




அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் ஏட்டுலா கனவாக்க அமைப்பின் முதல் புத்தக வெளியீடாக அக்கரைப்பற்று முபீதா அமீன் எழுதிய அவரது கன்னி நூலான "நிதர்சனத்தின் நிழல்" கவிதை நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை (06) மாலை 3.30மணிக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூசனம் மீரா எஸ்.இஸ்ஸதீனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், கௌரவ அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் மற்றும் விசேட அதிதிகளாக கலை இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சமூக ஆர்வலர்கள் இன்னும் பலரும் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இலட்சியக் கனவோடு, இலக்கிய உலகில் பயணிக்கும் எழுத்தாளர்களின் புத்தகக் கனவினை நனவாக்கும் இந்த நூலாசிரியரின் கன்னி முயற்சி வெற்றி பெற அனைவரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## காட்டுப்பாதை ஊடாக இதுவரை 14,110 யாத்திரீகர்கள் பயணம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



கதிர்காமம் காட்டுப் பாதை ஊடாக இதுவரை 14,110 பேர் பாத யாத்திரையில் ஈடுபட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கதிர்காமம் கொடியேற்றத் திருவிழா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முருக பக்தர்கள் காட்டுவழிப் பாதை ஊடாக கதிர்காமக் கந்தனை தரிசிக்க பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் உகந்தை மலை முருகன் ஆலயம் ஊடாக செல்லும் காட்டுவழிப் பாதை திறந்து வைக்கப்பட்டது. இப்பாதையானது எதிர்வரும் 11 ஆம் திகதியன்று மீண்டும் மூடப்படவுள்ளது. இம்முறை அதிகளவிலான பக்தர்கள் காட்டுப் பாதை ஊடாக பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர். காட்டுப்பாதை திறக்கப்பட்டு கடந்த ஐந்து நாட்களில் 14110 பேர் பயணம் செய்துள்ளனர்.

இனி வரும் இன்னும் ஆறு நாட்களில் இதைவிட அதிகளவிலான பக்தர்கள் காட்டுப் பாதையூடாக பயணம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து உகந்தை முருகன் ஆலயத்திற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

காட்டுப் பாதையில் பயணிப்பவர்களுக்கு தொண்டர் அமைப்புக்கள் குடி நீர் வசதி சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கை நிர்வாக சேவை பெண் உத்தியோகத்தர்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மூதூர் ஆனைச்சேனையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது ஆலிம் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட றசீம் பாத்திமா றொஷானா இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியை மூதூர் அறபா நகர் வித்தியாலயத்திலும் மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயம்,.மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியையும், திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவிலும் கல்வி கற்ற இவர் பொது நிர்வாகத்தில் இளமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

சிறந்த கல்விப் பின்னணியைக் கொண்ட அதிபர் சேவையைச் சேர்ந்த கே.றசீம் மற்றும் மாஹிலா தம்பதிகளின் மூத்த மகளான இவர் மூதூர் அல் ஹிலால் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் முகம்மது சப்றி முகம்மது சியா என்பவரின் மனைவியும் ஆவார்.

மூதூர் பிரதேச சபை, மூதூர் வலயக் கல்வி அலுவலகம், சேருவில பிரதேச சபை ஆகியவற்றில் 10 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த இவர் தற்பொழுது மூதூர்பிரதேசசபையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். றஸீம் பாத்திமா றொஷானா அண்மையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிருவாக சேவை போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன், மூதூரிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பெண் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராக அமைந்து சாதனை படைத்துள்ளார்.

## உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் 6 இல் ஆரம்பம்!

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஜூலை மாதம் 6 ஆம் தேதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகி ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க சுதா தெரிவித்தார். உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும் 06 ஆம் திகதி ஆலய பிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22ஆம் தேதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமரர் இரா.சம்பந்தனின் பூதவுடலுக்கு திருமலையில் இறுதி அஞ்சலி









யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு விசேட விமானம் ஊடாக கொண்டுவரப்பட்ட அமரர் இரா. சம்பந்தனின் பூதவுடல் அவருடைய இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் மற்றும் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதை படங்களில் காணலாம்.

(படம்:கந்தளாய் தினகரன் நிருபர்)

# ஜூனியர் சுப்பர் சிங்கர் குரல் தேர்வு இன்று 6ஆம் திகதி யாழ். திருமறைக் கலாமன்றத்தில்




*C J Pramoters & Dhedjassam Event Solutions* அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்படும்.

வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்தப் போட்டி முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்றத்தில் இன்று 06ஆம், 07ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்திலும் சாவகச்சேரி நகராட்சி மண்டபத்திலும் எதிர்வரும் 2024 ஜூலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு மன்னார், நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஜூலை 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் அடுத்த குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை, யாழ். பீச் ஹோட்டலில் எதிர்வரும் 2024 ஜூலை 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று கிளிநொச்சி, பரந்தன் ஆர்ஜே மஹாலில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 03 ஆம், 04ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று முல்லைத்தீவு, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று வவுனியா, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும்.

பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ். பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட்டின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.



புத்தளம் வலய மட்ட 20 வயதுக்கு கீழ்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி பு/ ஷாகிரா கல்லூரியில் நடைபெற்றது. இதில் பு/ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து கலந்து கொண்ட 20 வயதுக்கு கீழ்ப்பட்ட வீராங்கனைகள் முதலிடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களை பாடசாலை சமூகம் பாராட்டியுள்ளது.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

# தமிழறிஞர் துரைசிங்கத்தின் நினைவுகூரல் நூல் வெளியீட்டு விழா




தமிழறிஞர் த. துரைசிங்கத்தின் நினைவுகூரல் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை (6) முற்பகல் 10.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு வானதி காண்டீபன் தலைமை தாங்கி, தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார்.

விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் முன்னிலை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் இலக்கிய புரவலருமான ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பதுடன் நூலின் முதல் பிரதியை பெற்று வெளியிட்டு வைப்பார்.

அறிமுகவுரையை வி.ரி. இளங்கோவனும், நினைவுரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

இதன்போது கருத்துரைகளை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், NIE உதவி விரிவுரையாளர் கீதா கணேஷ், மூத்த பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம், எழுத்தாளர் மேமன் கவி, இலக்கிய சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கல் நடைபெற்று, நன்றியுரையுடன் விழா நிறைவுறுமென, இலங்கை, பாரிஸ் முன்னோடிகள் இலக்கிய வட்டத்தினர் தெரிவித்தனர்.




# ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி!" நாவல் வெளியீடு

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி!" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.53க்கு கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. ஜேம்ஸ் பொன்ட் 007 கதைப் பாணியில் இலங்கை இலக்கிய உலகில் வெளிவரும் முதலாவது நாவல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தன், சமூக சேவகியும் கலை இலக்கிய செயற்பாட்டாளருமான கலாநிதி கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, சமூக சேவகரும் ஆன்மிகவாதியுமான தேசமான்ய பிச்சை கிருஷ்ணா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான கலாநிதி துரைராசா சுரேஷ், டவர் ஹோல் பவுண்டேஷனின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி எஸ்.




ஜெயபிரகாஷ் சர்மா, யுனைடட் ஆர்ட் ஸ்டேஜின் தலைவர் கலாபூஷணம் கே. செல்வராஜன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். மணிமாறன், அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர், கலைஞர் ஆறுமுகம் ரவீந்திரன், பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் கலாநிதி வைத்தியமாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா, தமிழ் மிரர் பிரதம ஆசிரியர் அழகன் கனகராஜ், கெப்பிட்டல் எப்.எம் வானொலியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம். எப். சியா உல் ஹசன், ஞாயிறு தினக்குரலின் உதவி ஆசிரியர் லெப்டின் ராஜ், பிரபல கட்டடக் கலைஞர் எம். நந்தகுமாரன், வருணி ஜுவலர்ஸ் அதிபர் கே. யோகரட்ணம், சாய் டெய்லர்ஸ் அதிபர் ரதீஜா சபாபதி, ரஜனி துலானி ட்ரவல்ஸ் என். ரஜனிகாந்த், சினிமா, தொலைக்காட்சி மேடை நாடக நடிகர் கலைஞர் விஜேசுந்தரம் ஆகியோர் ஊடக விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

கலைஞர் தேவர் முனிவர் வரவேற்புரையாற்ற கவிஞர் தாமரைச் செல்வி நூல் அறிமுகவுரையாற்றுவார். தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை உரையாற்றுவார்.

இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன், IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் விஷேட உரைகளை ஆற்றவுள்ளனர். இங்கு கவிப்பேரரசு பிரேம்ராஜ் சிறப்புரையாற்றுவார். நூல் ஆசிரியரைப் பற்றிய கவிதையொன்றை பிரபல பின்னணிப் பாடகி கவிதாயினி அருணா அருந்தவம் பாடவுள்ளார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

நூலின் முதற்பிரதியை IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி வெளியிட்டு வைப்பார். திருமதி நீரஜா யோகரட்ணம் நன்றியுரையாற்றுவார். ஊடகவியலாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான இளையதம்பி சந்திரனும் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பிரபல அறிவிப்பாளருமான




சந்திரிகா நிரோஷன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள். கெப்பிட்டல் வானொலி இலத்திரனியல் ஊடக அனுசரணை வழங்கவுள்ளது.

# 2023–2024 Huawei ICT இறுதிப் போட்டியில் மொரட்டுவை பல்கலை இரண்டாமிடம்




*2023-2024 Huawei ICT* உலகளாவிய இறுதிப் போட்டியில், இலங்கை சார்பில் பங்குபற்றி மொரட்டுவை பல்கலைக்கழக அணி, பயிற்சிப் போட்டியின் *Cloud Track 1* இல் இரண்டாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இலங்கையில் இருந்து ஒரு அணி, தேசிய மட்டத்திலிருந்து இந்தோனேசியாவில் இடம்பெற்ற பிராந்திய மட்டத்திற்கும், இறுதியாக சீனாவில் இடம்பெற்ற உலகளாவிய மட்டத்திற்கும் முன்னேறிய முதலாவது தடவை இதுவாகும்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மூன்று திறமையான மாணவர்களை இந்த அணி கொண்டிருந்தது. அணியின் தலைவராக சசிக சங்கலனவும் அதன் உறுப்பினர்களாக வராகி வகீசன், கிருஷிஹான் ரவீந்திரன் ஆகியோர் உள்ளடங்கின்றனர். சீனாவில் நடைபெற்ற இப்போட்டியில் அவர்கள் தங்களது சிறப்பான வெளிப்படுத்தலை காட்டியதோடு, உலக அரங்கில் இலங்கைக்கு ஒரு முக்கிய இடத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

*2023–2024 Huawei ICT* உலகளாவிய இறுதிப் போட்டியின் நிறைவு நிகழ்வு மற்றும் விருது வழங்கும் விழா ஆகியன கடந்த 2024 மே 26 ஆம் திகதி சீனாவின் ஷென்சென் நகரில் நடைபெற்றது.

இந்த வருட போட்டியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 2,000 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இருந்து 170,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முதன் முறையாக இத்தனை பேர் நேரடியாக (ஒன்லைனில் அல்லாது) கலந்து கொண்ட சந்தர்ப்பம் இதுவாக அமைந்திருந்தது. 49 வெவ்வேறு நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து 470 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்களைக் கொண்ட 160 இற்கும் மேற்பட்ட அணிகளின் தேசிய மற்றும் பிராந்திய போட்டிகளைத் தொடர்ந்து, இந்த வருட உலகளாவிய இறுதிப் போட்டிக்கு அணிகள் தகுதி பெற்றிருந்தன.

# சிறுவர்களின் கணிதத் திறனை அதிகரிக்க UCMAS உடன் இணையும் செலான் டிக்கிரி




நாட்டின் முன்னணி சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான செலான் டிக்கிரி, சிறுவர்களின் கணிதத் திறன்களை மேம்படுத்துவதற்காக அபாகஸ் அடிப்படையிலான கற்றல் முறையான *Universal Concept Mental Arithmetic System (UCMAS)* உடன் சமீபத்தில் கைகோர்த்தது.

பொதுவாக சிறுவர்கள் சலிப்பாகவோ அல்லது புரிந்துகொள்ள கடினமாகவோ கருதும் பாடமான கணிதத்தை கற்றல் செயன்முறையை சுவாரஸ்யமாக்குவதன் மூலம் சிறுவர்கள் அதனை சிறப்பாகவும் எளிதாகவும் கற்க உதவுவதே செலான் டிக்கிரியின் இம்முயற்சியின் நோக்கம் ஆகும். இது 4 தொடக்கம் 13 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இணைவு, 2024 ஜூன் 25 அன்று செலான் வங்கியின் தலைமையகத்தில் அண்மைய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தற்போதைய *UCMAS* மாணவர்களின் திறன்கள் நேரடியாக காட்சிப்படுத்தப்பட்டதோடு கணிதத்தை புரிந்துகொள்ள கஷ்டப்படும் மாணவர்களின் வாழ்க்கையை எளிதாக்கும் கல்வி முயற்சிகளுக்கு நிதி மற்றும் ஆதரவு அளிப்பதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. சிறுவர்கள் தங்கள் கல்வி ஊடாக சிறந்த பலனைப் பெறுவதற்கு அதனை மகிழ்ச்சியுடன் கற்பது அடிப்படையானது என்பதை நினைவூட்டுவதாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

எப்போதும் சிறுவர் நட்புறவான புதுமைகள் மற்றும் முன்முயற்சிகளைத் தேடுவதில் ஆர்வம் காட்டும் செலான் டிக்கிரி, *UCMAS*இன் தனித்துவமான சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்தமை இலங்கையில் அடுத்த தலைமுறையின் அறிவுசார் திறன்களை வளர்ப்பதில் இரு சாராரதும் பகிரப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

# கண் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்தும் Suwasewana Hospital



கண்டியில் உள்ள முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குனரான *Suwasewana Hospital* (சுவசெவன மருத்துவமனை), புதிய சத்திரசிகிச்சை கூட வளாகம் மற்றும் அதிநவீன *ZEISS OPMI LUMERA 700* நுணுக்குக்காட்டியை தமது கண் பராமரிப்பு மையத்தில் இணைத்துள்ளதன் மூலம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. தனது ஒப்பிட முடியாத கண் பராமரிப்பு சேவைகளுக்குப் புகழ் பெற்ற *Suwasewana Hospital*, இப்பிராந்தியத்தில் அதிக எண்ணிக்கையிலான கண் அறுவை சிகிச்சை நிபுணர்களையும், அதிகளவிலான அறுவை சிகிச்சைகளையும் இவ்வைத்தியசாலை மேற்கொண்டுள்ளது. ரூ. 100 மில்லியன் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த சமீபத்திய மேம்படுத்தலானது, நோயாளிகளுக்கான சுகாதார பராமரிப்பில் சிறந்து விளங்குவதற்கான மருத்துவமனை கொண்டுள்ள அர்ப்பணிப்பை சுட்டிக் காட்டுகிறது.

*Suwasewana Hospital* கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடைவிடாத அர்ப்பணிப்புடன், கண்டியில் மிகவும் மரியாதைக்குரிய தனியார் சுகாதார சேவை வழங்குநர்களில் ஒன்றாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. *Suwasewana Hospital* பிரதம நிறைவேற்று அதிகாரி நளின் பஸ்குவல் இது பற்றித் தெரிவிக்கையில், "கண்டியில் உள்ள மிகவும் புகழ் பெற்ற தனியார் சுகாதார சேவை வழங்குநர்களில் ஒன்றான *Suwasewana Hospital*, எப்போதும் கண் பராமரிப்புக்கு அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறது. இந்தத் துறையில் நாம் காணப்படுகின்ற உயர்வான நிலையானது, சிறந்து விளங்குவதற்கான எமது தொடர்ச்சியான உந்துதலின் ஒரு பெறுபேறாகும். தற்போது கொழும்பில் மட்டுமே காணப்படும் விழித்திரை அறுவை சிகிச்சை சேவைகளை, புதிய மேம்பாடுகளுடன், எமது வைத்தியசாலைக்கும் அறிமுகப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்," என்றார்.

*ZEISS OPMI LUMERA 700* நுணுக்குக்காட்டியானது, அனைத்து விதமான கண் மருத்துவ சேவைகளுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, அறுவை சிகிச்சை செயற்திறனை மேம்படுத்துவதற்காக மேம்பட்ட அம்சங்களையும் அது கொண்டுள்ளது. இது அதன் *Markerless IOL Alignment* சீர்படுத்தல் அம்சம் மூலம் *Intraocular lens alignment* சீரமைப்பை எளிதாக்குகிறது. அத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட *OCT3* புகைப்படவியல் அம்சம் மூலம் அறுவை சிகிச்சையின் போது நிகழ்நேர காட்சியமைப்பை காண்பிக்கிறது. கண்புரை குறைபாடுகளுக்கான *ZEISS Cataract Suite* ஆனது, சிறந்த இறுதி பெறுபேற்றை உறுதி செய்வதற்காக ஏனைய அதன் முன்னணி தயாரிப்புகளுடன் தங்குதடையின்றி செயற்படுகிறது.

## தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

# ஜனசக்தி லைஃப் முதல் காலாண்டு வளர்ச்சி 44% ஆக அதிகரிப்பு



இலங்கையின் முன்னணி ஆயுட் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான ஜனசக்தி லைஃப், 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது. இது நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

ஜனசக்தி லைஃப்பின் மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுச் சந்தாவின் (GWP) வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 44% ஆல் உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்பானது நிறுவனத்தின் வெற்றிகரமான சந்தை விரிவாக்கத்தையும் புதிய வாடிக்கையாளர்கள் ஈர்க்கப்படுவதையுமே எடுத்துக்காட்டுகின்றது. இதுதவிர ஏனைய செயற்பாட்டு வருமானம் 22% ஆல் அதிகரித்துள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் மூலோபாய முதலீடுகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது காலாண்டின் வரிக்கு முந்தைய இலாபம் (PBT) 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 29% அதிகரிப்பினை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வளர்ச்சி நிறுவனத்தின் பயனுள்ள செயல்பாட்டு உத்திகள் மற்றும் சிறந்த நிதி முகாமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.




மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டு, 63 ஆண்டுகள் நிறைவையிட்டு ஜுலை 01 ஆம் திகதியன்று, மக்கள் வங்கியின் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சங்கங்கள் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் சர்வமத நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

# 'Ignite the Future' சிறந்த ஊழியர்களை கௌரவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ்




2023/24 நிதியாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனம், சிறந்த செயல் திறன்களையும் திறமைகளையும் வெளிப்படுத்திய ஊழியர்களை கௌரவிக்கும் முகமாக வருடாந்த விருது வழங்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. 'எதிர்காலத்தை ஒளிரச் செய்யுங்கள்' (Ignite the Future) என்ற தொனிப்பொருளின் கீழ், சுகாதார சேவைகள், வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் விவசாய வணிகம் போன்ற அதன் வணிகத் துறைகளின் ஊழியர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், துணைத் தலைவர் விஷ் கோவிந்தசாமி, சன்ஷைன் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரமுடைய முக்கிய குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்ட இந்த விருது வழங்கும் நிகழ்வில், 156 பேருக்குத் *Merit, Excellence* மற்றும் *Chairman* விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், 10 முதல் 20 ஆண்டுகள் வரை நிறுவனத்தின் வெற்றிக்காக உழைத்த ஊழியர்களின் விசுவாசத்தைப் பாராட்டி 89 நீண்டகால சேவை விருதுகளும் வழங்கப்பட்டன. மேலும், பணியிட சிறப்பு பங்களிப்புகளுக்கான 13 விருதுகளும் இங்கு வழங்கப்பட்டன. 3000க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட சன்ஷைன் ஹோல்டிங்ஸின் வெற்றியில் சிறந்த பங்களிப்பை ஆற்றிய ஊழியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம் இதன்போது கருத்து தெரிவிக்கையில், "எமது நிறுவனத்தின் வெற்றிக்கு உங்களின் பங்களிப்பிற்காக முதலில் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய விருதுகளைப் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதற்கும் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்." என்றார்.

# ஓய்வு பெறும் வயதை அண்மிக்கும் ஊழியருக்கு DFCC கருசரு நெகிழ்வான தனிநபர் கடன் திட்டம்

புதுமையான புதியதொரு கலப்பு தனிநபர் கடன் வசதியான "DFCC Garusaru Hybrid Personal Loan" திட்டத்தை DFCC வங்கி, அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த வகையிலான புத்தாக்கத்துடன், முதன்முதலாக அறிமுகமாக்கப்பட்டுள்ள இக்கடன் திட்டமானது ஓய்வு பெறும் வயதை அண்மிக்கின்ற அரச ஊழியர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் முக்கிய தேவைகளுக்கான ஒரு தீர்வாகவும் காணப்படுகின்றது. DFCC Garusaru Hybrid Personal Loan தனிநபர் கடன் திட்டமானது கடனைப் பெற்றுக்கொள்கின்றவர்கள் பணியாற்றும் போதும் மற்றும் ஓய்வு பெற்ற பின்னரும் கடனை மீளச் செலுத்தும் வகையில் தனித்துவமான சிறப்பம்சத்தை வழங்குவதுடன், வங்கித் துறையில் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகவும் மாறியுள்ளது.

இன்னும் 6 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெறும் வயதை அண்மிக்கின்ற அரச ஊழியர்களின் நிதியியல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள DFCC Garusaru Hybrid Personal Loan ஆனது பொதுவான சவாலுக்கு நெகிழ்வானதொரு தீர்வாக அமைந்துள்ளது. அந்த வகையில் அதிகபட்சமாக ரூபா 5,000,000 வரையான நிதியை அணுகுவதற்கு வலுவூட்டுகிறது. குறைந்தபட்ச மாதாந்த சம்பளமாக ரூபா 30,000 உடன் நிரந்தர சேவையிலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் இதற்கு தகைமை உடையவர்கள். கடனைப் பெறுகின்றவர்கள் 75 வயதை எட்டுவதற்கு முன்பதாக கடன் பெற்ற தொகை முழுவதையும் மீளச் செலுத்தும் வகையில், இக்கடன் 20 ஆண்டுகள் வரையான தவணைக்காலத்தையும் கொண்டுள்ளது.

DFCC வங்கியின் தனிநபர் வங்கிச் சேவை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிப் பிரிவுக்கான சிரேஷ்ட உப தலைவர் ஆசிரி இத்தமல்கொட அவர்கள் கருத்து வெளியிடுகையில், "அரச சேவையிலுள்ள சிரேஷ்ட பிரஜைகளை நிதியியல் ரீதியாக வலுவூட்டுவதில் இது முக்கியமானதொரு சாதனையாகும் என்று குறிப்பிட்டார்.

# ஆரம்ப நாளில் அதிக சந்தா செலுத்தப்பட்ட கொமர்ஷல் வங்கி கடன் பத்திர வழங்கல்

இலங்கையின் தனியார் வங்கியொன்றின் மிகப் பெரிய கடனீட்டுப் பத்திரம் என்ற ரீதியில் கொமர்ஷல் வங்கியினால் விநியோகிக்கப்பட்ட நிலையில் மேலதிகமாக அதிக சந்தா செலுத்தப்பட்டதால் ஆரம்ப தினமன்றே முடிவுக்கு வந்தது. இதற்கிணங்க இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கிக்காக ரூ. 20 பில்லியனை 2024 ஜுலை 02 திரட்டியமை மூலம் நிறுவனத்தில் முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக சந்தா பெற்றமை தொடர்பாக அறிவித்து வங்கி தெரிவிக்கையில், ஆரம்ப விநியோக தொகையான ரூ.10 பில்லியனை விட மூன்று மடங்குக்கும் அதிகமான விண்ணப்பங்களைப் பெற்றுள்ளதாகவும், அனைத்து விருப்பங்களையும் பயன்படுத்தி ரூ.20 பில்லியனை திரட்டியுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்த விநியோகத்தின் அதிகப்படியான சந்தா குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, 'இது நிறுவன மற்றும் தனிப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து மிகவும் ஊக்கமளிக்கும் நம்பிக்கை செயற்பாடாகும். இந்த குறிப்பிடத்தக்க சாதனை, எங்களின் உன்னிப்பாக வடிவமைக்கப்பட்ட மூலோபாயநகர்வில் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கைக்கு ஒரு சான்றாக உள்ளது. அத்துடன் கொமர்ஷல் வங்கியானது நாட்டின் முன்னணி தனியார் துறை நிதிச் சேவை வழங்குனராக, வலுவான நிர்வாகம் மற்றும் நிலையான நிதிச் செயல்பாட்டின் கொள்கைகளால் வழிநடத்தப்படுவதையும் இது உணர்த்துகிறது.

வங்கியின் இரண்டாம் வரிசை மூலதனத்தை மேலும் ஸ்திரப்படுத்தும் வகையில் 100 மில்லியன் ரூபாவுக்கான கடன் பத்திரங்களை 10 பில்லியனைத் திரட்டும் வகையில், விநியோகித்தது. ஆரம்ப விநியோகத்தில் அதிகப்படியான சந்தாக்கள்; பெறப்பட்டால் வங்கியின் விருப்பப்படி, மேலும் 50 மில்லியன் கடனீட்டுப் பத்திரங்களை வழங்குவதற்கான விருப்பத்துடன் வங்கி இதனை மேற்கொண்டது.

# 2023/24 நிதியாண்டில் சீரான வளர்ச்சியை பதிவு செய்த பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி



இலங்கையில் வங்கி அல்லாத நிதியியல் சேவை வழங்குனர்களில் முன்னிலை வகித்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, 2023/24 நிதியாண்டில் தனது நிதியியல் பெறுபேறுகள் மூலமாக பாராட்டத்தக்க நெகிழ்திறன் மற்றும் மூலோபாய தொலைநோக்கு ஆகியவற்றை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. ரூபா 3,541 மில்லியன் என்ற வலுவான வரிக்கு பிந்தைய இலாபத்தைப் பதிவாக்கியுள்ள நிறுவனம், கடந்த ஆண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 3,018 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 17.3% என்ற கணிசமான அதிகரிப்பை எட்டியுள்ளது. குறிப்பாக மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகள் சாதகமாக அமைந்த நிலையில், வருடத்தின் பிற்பாதியில் வலுவான பெறுபேறுகளை பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது. இக்காலப்பகுதியில் இலாபத்திறன் குறிப்பிடும்படியாக மேம்பட்டுள்ளதுடன், ரூபா 2,438 மில்லியன் என்ற வரிக்கு பிந்தைய இலாபத்தையும் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரிவடைந்த வட்டி வீதங்களுடன், சவால்மிக்க வணிகச் சூழலுக்கு மத்தியிலும், வட்டி வருமானத்தின் வீழ்ச்சியை வெறும் 4.5% என்ற அளவில் பேண பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி ஆல் முடிந்துள்ளது.

இதனுடன் சேர்த்து, குறிப்பாக திறன்மிக்க கடன் அறவீட்டு மூலோபாயங்கள் மற்றும் கடன் திறன்வலுக் குறைப்பு திருப்பல்கள் தொடர்பில் அவதானத்துடனான ஏற்பாடுகள் போன்ற பல்வேறு மூலோபாய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதால் நிறுவனத்தால் இலாபத்திறனை மேம்படுத்த முடிந்துள்ளது. அந்த வகையில், கடன் திறன்வலுக் குறைப்பு திருப்பல் 2023/24 நிதியாண்டில் ரூபா 1,156 மில்லியனாக பதிவாக்கப்பட்டு, ஆரோக்கியமான கடன் அறவீட்டு சராசரி விகிதத்திற்கு பங்களித்துள்ளது.

# சம்பியன்ஸ் கிண்ணம்: இந்தியா–பாக். போட்டி மார்ச் 1இல் லாகூரில் நடத்துவதற்கு திட்டம்




ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை அடுத்த ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடத்த பகிஸ்தான் கிரிக்கெட் சபை பரிந்துரைத்திருப்பதோடு இந்தியாவின் போட்டிகளை லாகூரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண தொடர் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் அடுத்த ஆண்டில் பாகிஸ்தானில் நடத்தப்பட உள்ளது. ஒருநாள் தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இதற்காக உத்தேச அட்டவணையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐ.சி.சியிடம் வழங்கி உள்ளது. அதன்படி பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை தொடர் நடத்தப்பட உள்ளது. ஏ குழுவில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நியூசிலாந்து அணிகளும், பி குழுவில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

மொத்தம் 15 போட்டி நடத்தப்படுகிறது. லாகூர் மைதானத்தில் 7, கராச்சியில் 3, ராவல்பிண்டியில் 5 போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அணியின் போட்டிகள் அனைத்தும் பாதுகாப்பு காரணங்களுக்காக லாகூரிலேயே நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியா–பாகிஸ்தான் போட்டி மார்ச் 1ஆம் திகதி நடத்தப்பட உள்ளது. ஆனால் இந்தத் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் செல்வது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இதுவரை எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை.

இந்திய அரசின் அனுமதி அளித்தால் மட்டுமே இந்தியா, பாகிஸ்தான் செல்லும். இல்லையெனில் இந்தியா பங்கேற்கும் போட்டிகள் டுபாயில் நடத்தபடலாம்.

இதனிடையே அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் தொடரை நடத்த ஆஸி. கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

## அக்கரைப்பற்று மருது வெற்றி



**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

அக்கரைப்பற்று மருது விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் அந்த கழக அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கடந்த புதனன்று (3) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று லோர்ட்ஸ் கழகத்தை எதிர்கொண்ட மருது அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இந்தத் தொடரில் மொத்தம் 64 அணிகள் பங்கேற்றன.

தொடர் நாயகன், ஆட்ட நாயகன் மற்றும் சிறந்த பந்துவீச்சாளர் விருதுகளை மருது அணியின் ஜனுஜன் வென்றார். சிறந்த துடுப்பாட்ட வீரராக அக்கரைப்பற்று லோர்ட்ஸ் அணியின் அம்சத் தெரிவானார்.

## வலய மட்ட கால்பந்து: புத்தளம் சாஹிரா வெற்றி



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற வலய மட்ட கால்பந்தாட்ட போட்டிகளில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் 18 வயதுக்குட்பட்ட அணி சம்பியனானது. போட்டி தொடரின் இறுதிப் போட்டியில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் பாடசாலை அணியை எதிர்த்தாடிய சாஹிரா அணியினர் 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சாஹிரா அணிக்காக முஹம்மது சக்கீ வெற்றி கோலை பெற்றார்.

## ரியல் மெற்றிக்ஸ் சம்பியன்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ALS Indoor Sports இன் ஆதரவில் நடைபெற்ற ஏ.எல்.எஸ் உள்ளக லீக் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் அட்டாளைச்சேனை ரியல் மெற்றிக்ஸ் அணி சம்பியனானது.

இச்சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று ஏ.எல்.எஸ் உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்றது. பதினெட்டு விளையாட்டு கழகங்கள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை றியல் மெற்றிக்ஸ் விளையாட்டுக் கழகம், அக்கரைப்பற்று சொலிட் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது.

தொடர் நாயகனாக றியல் மெற்றிக்ஸ் அணி வீரர் சாதீர் தெரிவு செய்யப்பட்டார்.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் கடும் தாக்குதல்களுக்கு இடையே புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சு ஆரம்பம்

### பலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை 38,000ஐ தாண்டியது

காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தைக்காக இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் தலைவர் டேவிட் பார்னி கட்டார் பயணித்திருப்பதோடு ஹமாஸ் தரப்பினரும் மத்தியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் 273 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றதோடு நாளையுடன் 9ஆவது மாதத்தை எட்டு காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,000ஐ தாண்டியுள்ளது.

கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் புதிய போர் நிறுத்த முன்மொழிவுஒன்றுக்குஹமாஸ்அமைப்பு பதில் அளித்திருக்கும் நிலையிலேயே இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இதனை வரவேற்றுள்ளார்.

இந்நிலையில் மொசாட் தலைவர் பார்னி இஸ்ரேலிய பேச்சுவார்த்தை குழு இன்று நேற்று (05) டோஹா பயணித்ததாக இஸ்ரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அவர் கட்டார் வெளியுறவு அமைச்சர் முஹமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜசிம் அல் தானியுடன் போர் நிறுத்த முன்மொழிவு குறித்து பேச்சுவார்த்தை நடத்திய பின் இஸ்ரேல் திரும்பவிருப்பதாக அந்த செய்தி குறிப்பிடுகிறது.

போர் நிறுத்த முன்மொழிவுக்கு ஹமாஸ் வழங்கி இருக்கும் பதில் சாதகமாக இருப்பதாக இஸ்ரேலிய தரப்புகள் குறிப்பிட்டபோதும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தடங்கலாக இருக்கக்கூடும் என்ற கவலையும் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பேச்சுவார்த்தைக் குழு ஒன்றை அனுப்ப நெதன்யாகு தீர்மானித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை நெதன்யாகு மற்றும் பைடன் தொலைபேசியில் பேசி இருப்பதோடு பணயக்கைதிகள் மற்றும் போர் நிறுத்த பேச்சுவார்த்தை குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்த முன்மொழிவுக்கான ஹமாஸின் பதில் குறித்த விபரம் வெளியாகாதபோதும், அந்த அமைப்பு போர் நிறுத்தத் திட்டத்திற்கு அப்பால் முழுமையான போர் நிறுத்தம் ஒன்றை கோரவில்லை என்று பலஸ்தீன அதிகாரி ஒருவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தனது நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு இணங்கி இருப்பதாக அமெரிக்க மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 'முக்கியமான முட்டுக்கட்டையில் நாம் திருப்பம் ஒன்றை பெற்றிருக்கிறோம்' என்று அந்த அமெரிக்க அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதனால் உடன்பாடு ஒன்றை நெருங்கிவிட்டதாக குறிப்பிட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இஸ்ரேலுடனான உடன்படிக்கை ஒன்றின் ஓர் அங்கமாக நிரந்தர போர் நிறுத்தத்திற்கான தமது நிபந்தனையில் எந்த மாற்றமும் இல்லை என்று ஹமாஸ் அதிகாரியான முஹமது நஸ்ஸால் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபிய நிதியில் இயங்கும் அல் அரபியா தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், தற்போதைய பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்படும் இடையூறை தவிர்க்கும் பொருட்டு ஹமாஸ் அளித்திருக்கும் பதில் தொடர்பான விபரத்தை வெளியிட முடியாது என்று கூறினார்.

எனினும் ஹமாஸின் பதிலில் முந்தைய திட்டங்களில் இருந்து கணிசமான மாற்றங்கள் இல்லை என்றும் குழுவின் பொதுவான கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

முன்னர் இடம்பெற்ற போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் ஹமாஸ் அமைப்பு நிரந்தரமாக போரை முடிவுக்குக் கொண்டுவருவது, காசாவில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் முழுமையாக வாபஸ் பெறுவது மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்புவது அதே போன்று நிவாரண மற்றும் மீள்கட்டமைப்புகளை அதிகரிப்பது பற்றிய நிபந்தனைகளை விதித்து வந்தது.

மறுபுறம் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கே விருப்பத்தை வெளியிட்டு வந்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பை முழுமையாக ஒழிக்கும் வரை போர் தொடரும் என்றும் வலியுறுத்தி வந்தது. இதேவேளை புதிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை குறித்து லெபனானின் ஹிஸ்புல்லா தலைவர் செய்யிது ஹசன் நஸ்ரல்லா மற்றும் முன்னணி ஹமாஸ் அதிகாரியான கலீல் அல் ஹய்யா நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.



காசா போரை ஒட்டி இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையிலும் பதற்றம் நீடிப்பதோடு ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே தினசரி மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் அது முழு அளவில் போராக வெடிக்கும் அச்சம் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்பு இடம்பெற்று வருகின்றன. காசா நகரின் தராஜ் பகுதியில் பர்தாவின் குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது நேற்று இடம்பெற்ற வான் தாக்குதலை அடுத்து அங்கிருந்து நான்கு சடலங்கள் மீட்கப்பட்டதாக அவசர மற்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று காசா நகரின் கிழக்கு பக்கமாக ஷஜைய பகுதியில் கடும் பீராங்கி தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதோடு பலஸ்தீன போராளிகளுடனான துப்பாக்கிச் சண்டையும் இடம்பெற்று வருவதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேநேரம் வடக்கு காசாவின் ஜபலியா நகரில் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்தி இருக்கும் தாக்குதலில் அங்கு தங்கி இருந்த மூன்று சிறுவர்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

காசா நகரில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இரு பாடசாலைகள் மீது இஸ்ரேல் குண்டு வீசிய நிலையில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசாவில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இஸ்ரேலின் படை நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு இஸ்ரேலியப் படை இன்னும் முழுமையாக நுழையாத காசாவின் கடைசி நகரான ரபாவை கைப்பற்றும் முயற்சியிலேயே அது ஈடுபட்டு வருகிறது.

அதேபோன்று தெற்கு நகரான கான் யூனிஸின் கிழக்குப் பக்கத்தில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேலிய படை உத்தரவிட்டிருக்கும் நிலையில் மக்கள் அடைகலம் தேடி வருகின்றனர். தற்காலிக முகாம்கள் நிரம்பி வருவதால் மக்கள் வீதிகளில் உறங்குவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலியப் படை நேற்று நடத்திய சுற்றிவளைப்பில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசா போரை ஒட்டி மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்திருப்பதோடு இஸ்ரேலிய சுற்றிவளைப்புகளில் இந்த வாரத்தில் குறைந்தது 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார வட்டாரம் தெரிவித்துள்ளது.

நேற்று இஸ்ரேலியப் படை கட்டடம் ஒன்றை சுற்றிவளைத்ததை அடுத்து மோதல் வெடித்ததாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெனின் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றை இராணுவ வாகனங்கள் சுற்றிவளைத்ததாகவும் அங்கு இருப்பவர்களை சரணடையும்படி ஒலிபெருக்கியில் கூறியதாகவும் வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. தொடர்ந்து ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் கொண்டு அந்த வீடு தாக்கப்பட்டதாக வபா குறிப்பிட்டது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவ சுற்றிவளைப்புகள் மற்றும் இஸ்ரேலிய குடியேற்றவாசிகளின் தாக்குதல்களில் குறைந்தது 565 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானின் இரண்டாவது சுற்று ஜனாதிபதி தேர்தல் நிறைவு




ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இடத்தை நிரப்புவதற்கான ஜனாதிபதி தேர்தலின் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நேற்று (05) இடம்பெற்றது.

கடந்த ஜூன் 28 ஆம் திகதி நடைபெற்ற முதல் சுற்று வாக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத நிலையில் இரண்டாவது சுற்றில் சீர்திருத்தவாதியான மசூத் பசஷ்கியான் மற்றும் தீவிர பழைமைவாதியான சயீத் ஜலீலி ஆகியோர் போட்டியிடுகின்றனர். அனைத்து அரச விவகாரங்களிலும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெற்ற ஈரான் உயர்மட்டத் தலைவர் அயதொல்லா அலி கமனெய் நேற்றுக் காலை தமது வாக்கை அளித்தார். காசா போரில் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையிலேயே ஈரானில் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதல் சுற்று தேர்தலில் பசஷ்கியான் 42 வீத வாக்குகளையும் ஜலீலி 39 வீத வாக்குகளையும் வென்று முதல் இரு இடங்களையும் பிடித்த நிலையிலேயே இரண்டாவது சுற்றில் போட்டியிட தகுதி பெற்றனர்.

## அட்லாண்டிக் கடலில் 89 சடலங்கள் மீட்பு



அட்லாண்டிக் கடலில் மூழ்கிய படகு ஒன்றில் இருந்து தஞ்சக்கோரிக்கையாளர்களின் 89 சடலங்களை மொரித்தானிய நாட்டு கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

ஐந்து வயது சிறுமி உட்பட ஒன்பது பேர் காப்பற்றப்பட்டபோதும் பலரும் காணாமல்போயுள்ளனர்.

மீன்பிடிப் படகு ஒன்றில் கடந்த வாரம் செனகல் மற்றும் காம்பிய எல்லையில் இருந்து 170 பேருடன் இந்தப் படகு புறப்பட்டதாக உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் படகு மொரித்தானியாவின் தென்மேற்கு கடற்கரைக்கு அப்பால் மூழ்கியுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பாவை அடைய முயற்சிக்கும் குடியேறிகளுக்கான முக்கிய பயணப் பாதை ஒன்றாக மொரித்தானியா உள்ளது.

இந்த அபாயகரமான பாதை வழியாக பொரும்பாலானோர் ஸ்பெயினின் கனரி தீவுகளை அடைகின்றனர். கடந்த ஆண்டு இங்கு சுமார் 40,000 பேர் வந்ததாக ஸ்பெயின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் கடல் வழியாக ஸ்பெயினை அடைய முயன்ற 5,000க்கும் அதிகமான தஞ்சக்கோரிக்கையாளர்கள் உயிரிழந்திருப்பதாக கமினன்டோ பென்டரஸ் என்ற தொண்டு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.